

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

வருடாந்த அறிக்கை - 2015

அனர்த்த முகாமைத்துவ நிலையம்.



முகவரி

வித்யா மாவத்தை
கொழும்பு 07

வெப் தளம்

www.dmc.gov.lk

மின்னஞ்சல்

info@dmc.gov.lk

அவசர நடவடிக்கை அழைப்பு

0112136222 / 2670002

வருடாந்த அறிக்கை – 2015

1 அறிமுகம் 1

1.1 அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை 1

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் இடர்கள் 3

2 அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்பாகச் சுருக்கமாகக் கூறுதல் 3

2.1 நோக்குகை, இலட்சியம், பணி, குறிக்கோள்கள் 4

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குப் பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன 4

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபன ஒழுங்கமைப்பு 5

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினர் மற்றும் பதவியணியினரைச் சேர்த்துக் கொள்ளல். 5

2.4.1.பதவியணியினரைச் சேர்த்துக் கொள்ளல். 5

2.4.2.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு 7

2.5 பணிப்பாளர் நாயகத்தின் கருத்து 8

2.5.1.அனர்த்தத் தாக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வு - 2015 8

3 தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள் 14

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைத் திருத்துதல் 14

3.2 தேசிய அவசரகால நிலைமைகள் கருமமாற்றும் திட்டம் 14

3.3 தாபனரீதியிலான அனர்த்த முன் ஆயத்தத் திட்டம் (IDMP) 14

3.4 இடைக்கால முகாமைத்துவக் குழு 15

3.5 கணக்காய்வு முகாமைத்துவக் குழு 15

3.6 தேசிய பாதுகாப்புத் தினம் - 2015 16

3.7 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு 17

3.8 அவசரகால நிலைமைகள் பதில் நடவடிக்கைகள் குழு 17

3.9 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் 18

3.10 Desinventra தரவுகள் களஞ்சியம் 18

4 தணித்தல், ஆராய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு. 19

4.1 அறிமுகம் 19

4.2 மாவட்ட அடிப்படையில் அனர்த்தங்களைக் குறைத்தல் 19

4.3 பாணந்துறை வெள்ளப்பெருக்கு அனர்த்த தடுப்புக் கருத்திட்டம் 24

4.4 தம்புள்ள வெள்ளப் பெருக்குத் தடுப்புக் கருத்திட்டம் 25

4.5 யாழ்ப்பாணத்தில் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தைத் தடுப்பதற்கான கருத்திட்டம் 25

4.6 அனர்த்தங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தில் உள்வாங்குதல். 26

5 முன் ஆயத்தப் பிரிவு 27

5.1 அறிமுகம் 27

5.2 மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த முன் ஆயத்தம் மற்றும் அவசரகால நிலைமை பதில் நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல். 30

5.3 கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் சமூக முன் ஆயத்த, அவசர நிலைமை பதில் நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தல். 32

5.4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் ஒத்திகைகளை நடத்துதல். 33

5.5 பாரிய நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் போன்றவற்றில் அனர்த்தங்கள் தொடர்பான முன் ஆயத்த நிகழ்ச்சித் திட்டங்கள் 35

5.6 நாட்டுக்குள் வெள்ளத்தில் மூழ்குவதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல். 35

5.7 பருவக்காற்று முன் ஆயத்தத் திட்டங்கள் 36

5.8 வைத்தியசாலைகளில் திடீர் அனர்த்த முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரித்தல் 37

5.9 பாடசாலை அனர்த்த தற்பாதுகாப்புத் திட்டம் 37

5.10 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட எனைய முன் ஆயத்த செயற்பாடுகள் 38

5.10.1 பதுளை மாவட்டத்தில் அனர்த்த ஆபத்து வரைபடங்கள் மற்றும் 5 ஆண்டு மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல் 38

5.10.2 சமூக அடிப்படையிலான அனர்த்த ஆபத்து முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலைத் தயாரித்தல் 38

5.10.3 ஒத்திகை நிகழ்ச்சித் திட்டங்களின் பொருட்டு வழிகாட்டல்களைத் தயாரித்தல். (Simulation Guideline) 39

6 அறிவூட்டும் பிரிவு 39

6.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினரின் ஆற்றல் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 40

6.2 அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 41

6.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் 42

6.2.2 அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் 42

6.2.3 பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 42

6.2.4 தேடுதல், மீட்பு மற்றும் பயிற்சி வழங்கல் 43

6.2.5 முப்படை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் 43

6.2.6 பாடசாலைகளில் இளைஞர் கொண்ட குழுக்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 44

6.2.7 முதலுதவிகள், முகாம் முகாமைத்துவத்துக்கான பயிற்சித் திட்டங்கள் 44

6.2.8 மீனவ சமூகத்துக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 45

6.2.9 கிராமிய அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் 45

6.2.10 இடம்பெயர் கண்காட்சி வாகனங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் 45

7 அவசர கருமமாற்றும் பிரிவு 46

7.1 வெள்ளப்பெருக்கின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 47

7.2 கடும் காற்று அனர்த்தத்தின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 47

7.3 வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். 48

7.4 தீ விபத்து அனர்த்தங்களின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 48

7.5 வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 48

7.6	முன்னறிவித்தல்	49
7.7	நாடுகளுக்கிடையிலான வலைப்பின்னல் (Intra Government Network)	50
7.8	சுனாமி நிலைமைகளின் போது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்பான ஒத்திகை	50
7.9	இலங்கை அனர்த்த வள வலைப்பின்னல்	51
7.10	அழைப்பு நிலையம்	51
7.11	டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்	52
7.12	இலங்கை இராணுவத்தினரால் அவசர நிலைமை நிவாரணக் குழுக்களுக்குத் தேடுதல் மற்றும் மீட்டல் தொடர்பாக ஐந்து நாள் ஆரம்பப் பாடநெறி	52
7.13	இலங்கையில் உள்ள நகரங்களுக்காக அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் நகரங்களை நிர்மாணிப்பதற்கான மூலோபாய முன்னறிவிப்பிற்கான சாத்தியத் தன்மையை மேம்படுத்தும் கருத்திட்டம் – 02வது கட்டம் (UNHABITAT)	53
7.14	2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட ஏனைய பணிகள்	54
7.15	சவால்கள்	54
8	நிதி முன்னேற்றம் – 2015 டிசம்பர் 31	55
9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. – 2015 டிசம்பர் 31	96
10	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சம்பந்தமான விளக்கங்கள – 2015 டிசம்பர் 31	110

வருடாந்த அறிக்கை – 2015

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தலைமை நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். குறிப்பிட்ட சகல தரப்பினரினதும் ஒத்துழைப்புடன் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் மற்றும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு இந்த நிறுவனத்துக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் ஒரு நிறைவேற்று நிறுவனமான 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்ட மூலத்தின் 13வது பிரிவின்படி இந்த நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. தேசியக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் மூலோபாய வழிகாட்டல்களை வழங்குதல் தொடர்பான பணிகள் தேசிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. பதில் நடவடிக்கைகள் தொடர்பான பொறிமுறையொன்று வகுக்கப்பட்டு முன்னோடியான அணுகுமுறையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகக் கொள்கை ரீதியிலான ஒரு மாற்றம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டு இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்தை முழுமையாக உள்வாங்கும் இடங்களைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒரு செயற்றிட்டமாக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்கச் சட்டமூலம் விளங்குகின்றது.


1.1. அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை நிறுவப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் போதான ஒரு பிரதான நிலையம் என்பதுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மற்றம் பிரதமரின் துணைத் தலைமைத்துவதத்துடன் கூடிய உயர் மட்டத்திலான அமைச்சர்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவத் தேசிய சபையின் ஏனைய உறுப்பினர்கள் சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் (முதலமைச்சருக்குக் கலந்துகொள்ள முடியாத பட்சத்தில் அந்த மாகாணத்தின் ஆளுநர்) மற்றம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேரைக் கொண்டதோர் அமைப்பாகும். (குறிப்பு 1.1)

அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையிலான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய சபையின் 10வது அமர்வு 2015 மே மாதம் 11ஆந் திகதி கூடியதுடன் அங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

- மாகாண அடிப்படையில் பாடசாலைத் தொண்டர் மாணவர் படையணியினை ஏற்படுத்தல்.
- யாழ்ப்பாணம், வலிகாமம், சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மாசடைதல் தொடர்பாக வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- 2012, 2013ஆம் ஆண்டுகளில் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்.
- 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு அறிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்.

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



குறிப்பு 1.1: தேசிய சபையின் கட்டமைப்பு

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் இடர்கள்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்கச் சட்டத்துக்கமைய அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் வரும் இடர்களாவன.

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளப்பெருக்கு
- வறட்சி
- கைத்தொழில் இடர்
- சுனாமி
- நில அதிர்வு
- விமான இடர்
- கடல் வழியான இடர்
- தீ
- தொற்று நோய்
- வெடிப்பு
- விமானத் தாக்குதல்
- உள்ளக மோதல்கள்
- இரசாயன இடர்கள்
- எக்ஸ் கதிர் கசிவு அவசர நிலைமைகள்
- உள்நாட்டிலும் கடலிலும் எண்ணெய்க் கசிவு ஏற்படல்
- அணு ஆயுத ஆபத்து
- நகர்ப்புறங்களில் தீ ஏற்படல் மற்றும் காட்டுத்தீ
- கடலரிப்பு
- டொளாடோ, இடிமின்னல்களுடன் கூடிய சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்பாகச் சுருக்கமாகக் கூறுதல்

பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மற்றும் பணிப்பாளர்களின் தலைமையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் 05 பிரிவுகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்த ஐந்து பிரிவுகளாவன அனர்த்தத் தலைப்பு, ஆராய்ச்சி, முன்னெச்சரிக்கை, முன் அறிவித்தல், தயாராகுதல், திட்டமிடல், மக்களுக்கு அறிவூட்டல், மனிதவளம் மற்றும் நிதி ஆகும். மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்புக் குழுக்கள் மாவட்ட அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அனர்த்த உதவியாளர்கள் என்போரின் உதவியுடன் உதவிப் பணிப்பாளர்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்றனர்.

2.1 நோக்குகை, இலட்சியம், பணி, குறிக்கோள்கள்

நோக்கு

பாதுகாப்பானதோர் இலங்கை சமுதாயத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்.

இலட்சியப் பணி

இலங்கையில் இயற்கையாக அல்லது மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழும் அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான தாக்கங்களைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து சமுதாயத்தில் விசேடமாகக் குடும்ப அலகுகளுக்குள் பாதுகாப்பான கலாச்சாரமொன்றைக் கட்டியெழுப்புதல்.

குறிக்கோள்கள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபையான மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட, பிரதேச, கிராம உத்தியோகத்தர் ஆகிய நாடளாவிய நிர்வாகக் கட்டமைப்புக்கள் பின்வரும் விடயங்களை ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல்.


2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குப் பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- தேசியக் கொள்கை அடிப்படையில் தேசிய இடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் தேசிய அவசர நிலைமைகளிலும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- இடர்களை வரைபடத்தில் உள்ளடக்குதலும் ஆபத்து நிலைமையினை மதிப்பீடு செய்தலும்.
- பயிற்சி, அறிவூட்டல், நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தலும் அவற்றை நடத்துதலும்.
- முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக அரச நிருவாகங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கையினை மேற்கொள்ளலும் முன் ஆயத்தங்களை ஏற்படுத்தலும்.
- முன்னெச்சரிக்கை ஏற்படுத்தல் மற்றும் அது தொடர்பான பிரசாரங்கள்.
- அவசர கால நிலைமைகளின் போதான பணியினை முகாமைத்துவம் செய்தலும் கண்காணிப்புச் சோதனையில் மீட்பு நடவடிக்கையினை ஒருங்கிணைத்தலும்.
- நிவாரணம் வழங்கள் உட்பட அனர்த்தத்தின் பின்னரான ஒருங்கிணைப்புப் பணிகள்.
- அனர்த்தங்களைக் குறைத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்.
- அனர்த்த ஆபக்துக்களைக் குறைத்தலை அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்குதல்.
- காலநிலை மாற்றங்களுக்கு இயைந்து செல்லக்கூடிய வகையில் அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- உரிய நேரத்தில் தமது கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் எனை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

- அனர்த்தங்களைத் தணித்தல், பதில் நடவடிக்கைகள், அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலைக்குத் திரும்புதல் என்பவற்றுக்கான வெளிநாட்டு உதவியினை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபன ஒழுங்கமைப்பு

குறிப்பு 2.1இல் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பல்வேறு வேலைத்திட்டங்களைக் கவனத்தில் கொண்டு இந்தத் தாபன ஒழுங்கமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பு

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினர் மற்றும் பதவியணியினரைச் சேர்த்துக் கொள்ளல்.

2.4.1. பதவியணியினரைச் சேர்த்துக் கொள்ளல்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு முறைக்கமையப் பதவியணியினர் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் வருட இறுதியாகும்போது தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மட்டத்திலிருந்த வெற்றிடங்களில் சுமார் ஒரு வீதமானவை நிரப்பப்பட்டுள்ளது. சில பதவிகள் தொடர்பாக நிறுவகத்தின் ஆட்சேர்ப்புப் பட்டியலில் உள்ள அடிப்படைத் தகைமைகள் தொடர்பான சிக்கலான நிலைமைகளினால் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் உள்ளது. மேற்கூறிய பிரச்சினை அரச முகாமைத்துவ திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணை 2.1இல் 2015இல் நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் அட்டவணை 2.2இல் அனுமதிக்கப்பட்ட

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் 2015.12.31ஆந் திகதியாகும் போது வெற்றிடங்களின் எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது.

பதவி	**எண்ணிக்கை**
பணிப்பாளர் (மனிதவளம், நிதி)	**01**
நிர்வாக உத்தியோகத்தர்	**01**
அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	**05**
முகாமைத்துவ உதவியாளர்	**03**
சாரதி	**01**
அலுவலக சிற்றூழியர்	**01**

அட்டவணை **2.1: 2015** இல் நிரப்பப்பட்ட வெற்றிடங்கள்

ஊழியர் வகை	அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உண்மையாக உள்ள ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடமாக உள்ள ஊழியர் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	**1**	**1**	**0**
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	**1**	**1**	**0**
பணிப்பாளர்	**5**	**3**	**2**
உள்ளகக் கணக்காய்வாளர்	**1**	**1**	**0**
பிரதிப் பணிப்பாளர்	**9**	**0**	**9**
உதவிப் பணிப்பாளர்	**15**	**13**	**2**
உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்)	**25**	**19**	**6**
கணக்கு உத்தியோகத்தர்	**1**	**0**	**1**
நிர்வாக உத்தியோகத்தர்	**1**	**1**	**0**
நூலகப் பொறுப்பாளர்	**1**	**0**	**1**
அந்தரங்க உதவியாளர்	**1**	**0**	**1**
அபிவிருத்தி உதவியாளர்	**1**	**1**	**0**


மொழி பெயர்ப்பாளர்	**2**	**0**	**2**
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	**2**	**0**	**2**
வீடியோ, கெமரா படப்பிடிப்பாளர்	**1**	**0**	**1**
தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்	**3**	**0**	**3**
வானொலி இயக்குனர்	**1**	**0**	**1**
முகாமைத்துவ உதவியாளர்	**46**	**46**	**0**
அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	**100**	**98**	**2**
சாரதி	**39**	**35**	**4**
அலுவலக உதவியாளர்	**10**	**7**	**3**
மொத்தம்	**266**	**226**	**40**

அட்டவணை 2.2: 2015.12.31ஆந் திகதி இறுதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினர்

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் 25 மாவட்டங்கள் முழுவதிலும் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பு அலகுகளும் உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களைக் கொண்டுள்ளது. ஏதேனுமோர் மாவட்டம் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய சாத்தியக் கூறுகள் கூடிக் குறையும் தன்மைக்கமைய மாவட்ட அனர்த்த முகாமையாளர்களின் எண்ணிக்கை மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும். உதவிப் பணிப்பளார்கள் (மாவட்டம்) இருபத்தைந்து பேரும் மாவட்ட அனர்த்த உதவியாளர்கள் தொண்ணூற்று எட்டுப் பேரும் இந்த இருபத்தைந்து மாவட்டங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவம் மற்றும் விமானப்படையின் 132 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்டச் செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை உருவப்படம் 2.2 இல் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.



உருவப்படம் 2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை

2.5 பணிப்பாளர் நாயகத்தின் கருத்து

2.5.1 அனர்த்தத் தாக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வு - 2015


i. ஒட்டுமொத்தமான தாக்கம் - 2015

வெள்ளம், மண்சரிவு, கடுங்காற்று, இடிமின்னல் தாக்கங்களுக்கு உள்ளான சனத்தொகை எண்ணிக்கை சுமார் 5,35,774 ஆகும். 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 80% குறைந்துள்ளது. உயிரிழந்த மற்றும் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை


முறையே 234 மற்றும் 192 ஆகும். 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

தாக்கம்	2013	2014	2015	வித்தியாசம் (%)
மரணங்கள்/ காணாமல் போதல்	126	154	123	-20.13
காயங்கள் ஏற்படல்	218	80	69	-13.75
பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை	495051	2702545	535744	-80.18
முழுமையாகச் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை	543	5312	685	-87.10
அரைவாசி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை	10035	19495	6438	-66.98

அட்டவணை 2.3 அனர்த்தப் பாதிப்புக்கள்



குறிப்பு 2.3: அனர்த்தப் பாதிப்புக்கள்




குறிப்பு 2.4: அனர்த்தங்களுக்குள்ளான மக்கள்

மாதங்கள்	அனர்த்தம்	பிரதேசம்
மார்ச்	கடுங்காற்று	எஹெலியகொட
யூலை/ ஓகஸ்ட்	வறட்சி	அம்பாறை
செப்டம்பர்	வெள்ளம்	மாத்தறை
செப்டம்பர்	மண்சரிவு	கொத்மலை
செப்டம்பர்	இடிமின்னல்	இப்பாகமுவ


அட்டவணை **2.4:** அனர்த்தப் பாதிப்புக்கள்

i. பாதிப்புக்கள் மாத அடிப்படையில் - 2015



குறிப்பு **2.5:** அழிந்த வீடுகள

சேதமடைந்த மற்றும் அழிந்த வீடுகளின் ஆகக் கூடிய எண்ணிக்கை 2015 நவம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளது. அதன் எண்ணிக்கை 3889 வீடுகளாகும். அதில் 97% வெள்ளத்தினால் அழிந்துள்ளன. அவ்வாறு சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 2478 ஆகும். அது யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளது,




குறிப்பு **2.6:** மரணங்கள், காணாமல் போதல்

ஏப்பிரல் (14 மரணங்கள்) செப்டம்பர் (25 மரணங்கள்) நவம்பர் (23 மரணங்கள்) மாதங்களில் ஆகக் கூடிய மரணங்கள், காணாமல் போதல் பதிவாகியுள்ளன. இடிமின்னல், நீரில் மூழ்குதல், இரசாயன பாதிப்புக்கள், செப்டம்பர் மாத நுவரெலியா மண்சரிவு, குருநாகல் இடிமின்னல் தாக்குதல் போன்ற அனர்த்தங்களாகும்.

ஆகக் கூடிய காயமடைந்தவர்களின் எண்ணிக்கை ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பதிவாகியுள்ளது. இதற்கான பிரதான காரணம் ஜூன் மாதம் (காயமடைந்தவர்கள் 14) கொழும்பு மாவட்டத்தில் மின்சாரத் தாக்குதல் நிலைமை, செப்டம்பர் மாதம் (காயமடைந்தவர்கள் 13) தென் மாகாணத்தில் நிலவிய வெள்ளப்பெருக்கு என்பனவாகும்.


ii. 2015 - நாடளாவிய ரீதியிலான அனர்த்தத் தாக்கங்கள்



பாதிக்கப்பட்ட சனத்தொகை 2015

2015 பாதிக்கப்பட்ட சனத்தொகையில் ஆகக் கூடிய எண்ணிக்கை யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பதிவாகியுள்ளன. இதற்கு நவம்பர் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நிலவிய வெள்ளப்பெருப்பு, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அம்பாறை மாவட்டத்தில் நிலவிய வறட்சி என்பன காரணமாகும்.

கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், கம்பஹ, காலி ஆகிய மாவட்டங்கள் 2015இல் பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டதனால் குறிப்பிடத்தக்களவான மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள்.




சேதமடைந்த வீடுகள் 2015

2015இல் சேதமடைந்த வீடுகளின் ஆகக் கூடிய எண்ணிக்கை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளன. அது நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் அதிகபட்ச எண்ணிக்கையாகப் பதிவாகியுள்ளது. வவுனியா, குருநாகல், கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, மொனராகல மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான வீடுகள் சேதமடைந்துள்ளன. அதற்கான பிரதான காரணம் செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கேகாலை, நுவரெலியா, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நிலவிய வெள்ளப்பெருக்கு மற்றும் கடுங்காற்றாகும்.

மாதம்	சேதமடைந்த, அழிந்த வீடுகளின் எண்ணிக்கை
செப்டம்பர்	556
ஒக்ரோபர்	241
நவம்பர்	4199
டிசம்பர்	942

அட்டவணை 2.5: சேதமடைந்த வீடுகள் 2015

iii. மரணங்கள் மற்றும் காணாமல் போனவர்கள் - 2015



குறிப்பு **2.7:** மரணங்கள், காணாமல் போதல்

2015இல் காணாமல் போன மற்றும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆகும். இதில் 47% ஆன மரணங்கள் நீரில் மூழ்கியதால் ஏற்பட்டுள்ளன. இரண்டாவது ஆகக் கூடிய உயரிழப்புக்கள் 23 ஆகும். இடிமின்னல் தாக்குதல் இதற்குக் காரணமாகும். 16 மரணங்கள் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டுள்ளன. ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது மண்சரிவினால் ஏற்பட்ட மரணங்கள் மிகக் குறைவாகும்.


2014இல் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

அனர்த்தம்	2014	2015	வித்தியாசம்
மண்சரிவு	64	9	-55
வெள்ளம்	37	16	-21
இடிமின்னல்	21	23	2
கடுங்காற்று	2	0	-2
நீரில் மூழ்குதல்	21	42	21
மொத்தம்	**145**	**90**	**-55**

அட்டவணை **2.6:** மரணங்கள், காணாமல் போதல்

iv. பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை – 2015

பாதிக்கப்பட்ட சனத்தொகையில் 51% ஆனவை தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக் காற்றுக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடியளவில் பாதிக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளது. சனத்தொகை எண்ணிக்கையுடன் பார்க்கும்போது அடுத்த பெருமளவு பாதிப்பு கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ளது. ஏனைய அனர்த்தங்களினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு சிறிதளவாகும். வெள்ளம், மண்சரிவு, வறட்சி, கடுங்காற்று என்பவற்றினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புப் பெருமளவு குறைந்துள்ளது. எனினும் மின்சாரத் தாக்குதல் மற்றும் நீரில் மூழ்கியதால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.




குறிப்பு **2.8:** பாதிக்கப்பட்ட சனத்தொகை

அனர்த்தம்	2014	2015	வித்தியாசம்
மண்சரிவு / தடுப்புச்சுவர் உடைதல்	144404	1469	-142935
வெள்ளம்	1177570	270840	-906730
வறட்சி	1495082	258096	-1236986
இடிமின்னல்	76	188	112
கடுங்காற்று	13907	3987	-9920
நீரில் மூழ்குதல்	0	38	38
மொத்தம்	2831039	534618	-2296421

அட்டவணை **2.7:** பாதிக்கப்பட்ட சனத்தொகை

v. சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை- 2015



கடும் வெள்ளம் காரணமாக 431 வீடுகள் சேதமடைந்தன. மொத்தமாக 5112க்கும் அதிகமான வீடுகள் பாதிப்படைந்தன. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது குறிப்பிடத்தக்களவு குறைவான நிலைமையாகும்.

குறிப்பு **2.9:** சேதமடைந்த வீடுகள்

அனர்த்தம்	2014		2015	
	முழுமையாகச் சேதமடைந்த வீடுகள்	அரைவாசி சேதமடைந்த வீடுகள்	முழுமையாகச் சேதமடைந்த வீடுகள்	அரைவாசி சேதமடைந்த வீடுகள்
மண்சரிவு	77	170	44	207
வெள்ளம்/ கசிவு	4918	15535	431	5112
இடிமின்னல்	0	18	1	31
கடுங்காற்று/ சூறாவளி	206	3648	99	925

அட்டவணை **2.8:** சேதமடைந்த வீடுகள்

vi. அனர்த்தங்களினால் ஏற்பட்ட தாக்கங்கள்- **2015**

- 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இயற்கையான அனர்த்தங்கள் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், மரணங்கள், வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன.
- 2015இல் ஆகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் மாவட்டங்களாக அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களைக் குறிப்பிடலாம்.
- மக்களுக்குக் குறிப்பிடப்பட்டளவு பாதிப்பு ஏற்பட்ட ஏனைய மாவட்டங்களாகக் கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைக் குறிப்பிடலாம்.
- 2015இல் வட மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை ஆகக் கூடுதலான எண்ணிக்கையாகக் குறிப்பிடலாம். அது 155,671 ஆகும்.
- நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 2014உடன் ஒப்பிடுகையில் பொதும் அதிகரித்துள்ளது.

3. தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைத் திருத்துதல்

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைத் திருத்தும் பணிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்தத் திருத்தச் சட்டமூலம் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

3.2 தேசிய அவசரகால நிலைமைகள் கருமமாற்றும் திட்டம்

தேசிய அவசரகால கருமமாற்றும் திட்டத்தை உருவாக்கும் தேவை 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை ஐக்கிய நாடுகளின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய அவசரகாலக் கருமமாற்றும் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மட்டத்தில், பிரதேச மட்டத்தில், குறிப்பிட்ட தரப்பினருக்கிடையில் அவசரகால பதில் நடவடிக்கைக்கான பொறிமுறையும் ஒருங்கிணைப்புப் பணிகள் வலியுறுத்தப்பட்டுத் தேசிய அவசரகால நிலைமைகள் கருமமாற்றும் திட்டத்தினால் முதற் தடவையாக மிகவும் வலுவான கட்டமைப்பொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பங்காளர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அந்த நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் விதிமுறைகள் (www.dmc.gov.lk/neop) உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தத் தேசிய அவசரகால நிலைமை கருமமாற்றும் திட்டம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

3.3 தாபனரீதியிலான அனர்த்த முன் ஆயத்தத் திட்டம் (IDMP)

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்துகமையத் தாபன முன் ஆயத்தத் திட்டத்தைத் தயாரிக்கும் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த வழிகாட்டல்கள் நிறுவனங்களுக்காகச் செயற்படுத்தியதன் பின்னர் பிரச்சினைகள் மற்றும் பலவீனங்கள் இனங்காணப்பட்டதுடன் அதன்படி வழிகாட்டல்களைத் திருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

3.4 இடைக்கால முகாமைத்துவக் குழு

அனர்த்த முகாமைத்துவ முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்காக அனர்த்த அமைச்சின் செயலாளரின் தலைமையில் 2014ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்புப் பின்வருமாறு.

1) செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – தலைவர்
2) நிதித் திட்டமிடல் அமைச்சு - பிரதிநிதிகள்- அங்கத்தவர்கள்
3) பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு- பிரதிநிதிகள்- அங்கத்தவர்கள்
4) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு- பிரதிநிதிகள்- அங்கத்தவர்கள்
5) பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆய்யு மையம் - அங்கத்தவர்கள்
6) தலைமைக் கணக்காளர் - அங்கத்தவர்கள்
7) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்- செயலாளர்

3.5 கணக்காய்வு முகாமைத்துவக் குழு

2015 டிசம்பர் 31ஆந் திகதிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு.

1. மேலதிக பணிப்பாளர் நாயகம், அரச முயற்சிகள் திணைக்களம் – தலைவர்
2. மேலதிக செயலாளர் (நாயகம்) பாதுகாப்பு அமைச்சு - உறுப்பினர்
3. தலைமைக் கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - உறுப்பினர்
4. கணக்காய்வு அதிகாரி, கணக்காய்வாளர் திணைக்களம் - உறுப்பினர்
5. பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்
6. பணிப்பாளர், அறிவூட்டல் பிரிவு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்
7. உதவிப் பணிப்பாளர் (நிதி), அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்
8. கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு), அனர்த்த முகாமைத்துவ நிலையம் - செயலாளர்

கணக்காளர் நாயகம் திணைக்களம் மற்றும் அனர்த்த மத்திய நிலையத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்படும் கணக்காய்வுக் கேள்விகளினால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாகவும், நிலையத்தில் உள்ள நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான விடயங்கள் இங்கு கலந்துரையாடப்படும். அதேபோன்று கணக்காய்வுக் கேள்விகளினால் முன்வைக்கப்படும் அவதானிப்புக்கள் சம்பந்தமான செம்மையாக்கல்களின் போது போதுமானளவிலான மற்றும் தரமான தன்மை தொடர்பாகத் தொடர்ந்து ஆராயப்படும். பின்னர் இந்த விடயம் தொடர்பாக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மத்திய நிலையத்தில் நடைபெறும் பதவியணியின் கூட்டங்களின்போது இந்த விடயங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு தொடர்பாக இரண்டு கணக்காய்வு, முகாமைத்துவக் கூட்டங்களும் 2015ஆம் ஆண்டு தொடர்பாக இரண்டு கணக்காய்வு, முகாமைத்துவக் கூட்டங்களும் மத்திய நிலையத்தில் உள்ள நிர்வாகக் கட்டமைப்பினை முறையாக, சரியான முறையில் முன்னெடுப்பது தொடர்பாகவும் உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.6 தேசிய பாதுகாப்புத் தினம் - 2015

தேசிய பாதுகாப்புத் தினத்தை ஒழுங்கு செய்வதன் நோக்கம் அனர்த்தங்கள் காரணமாக உயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட அனைவரையும் நினைவு கூர்தலாகும். விசேடமாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் பாதுகாப்பு மற்றும் அனர்த்த ஆபத்து நிலைமைகள் தொடர்பாக அறிவூட்டும் பாதுகாப்புக் கலாச்சாரமொன்றை ஏற்படுத்தலாகும்.

2015 தேசிய பாதுகாப்புத்தின வைபவம் பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் உதவியுடன் 2015 டிசம்பர் மாதம் 26ஆந் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் காரணமாக அந்த நிகழ்ச்சியை நடத்த முடியவில்லை. எனினும் மாவட்ட அடிப்படையில் சகல மாவட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய பாதுகாப்புத் தினத்தைத் தொனிப் பொருளாகக் கொண்டு நடத்தப்பட்டது. அனர்த்தங்களின் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூரல் தேசிய பாதுகாப்புத் தினத்தின் முக்கிய நோக்கமாகும். பாடசாலை

மாணவர்களுக்கிடையிலான அறிவினை மேம்படுத்தல் நோக்குடன் தேசிய மட்டத்திலான கட்டுரை, ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

3.7 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த ஒருங்கிணைப்புக் குழு *(NDMCC)* நிறுவப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைமைத்துவம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் ஏற்கப்படுவதுடன் அமைச்சின் பிரதிநிதிகள், திணைக்களங்கள், முப்படையினர், பொலிஸ் படையணி, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை முகவர் நிறுவனங்கள் ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது. தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவின் (NDMCC) நோக்கம் அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், மற்றும் அனர்த்த பாதிப்பற்ற சமுதாயமொன்றை உருவாக்குவதற்காகத் தேசிய ரீதியில் முயற்சிகளை மேற்கொள்வதாகும்.

- தகவல் பரிமாற்றம், தகவல்களைப் பகிர்ந்தளித்தல் என்பவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகச் செயலாற்று நிறுவனமொன்றை ஏற்படுத்தல்.
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அதற்கான மூலோபாயங்கள் தொடர்பாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் சம்பந்தமாக வசதியினை வழங்குதல்.
- அனர்த்த ஆபத்து முகாமைத்துவத்தின் பணியினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காகச் சகல அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டாளர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல்.

2007ஆம் ஆண்டில் 6 நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 14 உறுப்பினர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழுவில் தற்போது 80 முகவர் நிறுவனங்கள் உள்ளன.

3.8 அவசரகால நிலைமைகள் பதில் நடவடிக்கைகள் குழு

அத்தியாவசிய சேவைகளில் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அவசரகால நிலைமைகளின் போது பதில் நடவடிக்கையினை மேற்கொள்ளும் குழுக்கள் அனர்த்தங்களின்போது குறிப்பிட்ட நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு வளங்களைப் பயன்படுத்தக் கூடிய மற்றும் அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நேரடியாகச் சம்பந்தப்பட்ட பங்காளர் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. 2015இல் தேசிய மட்டத்தில் மற்றும் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட பாரிய அனர்த்தங்களின்போது அவசரகால நிலைமை பதில் நடவடிக்கைக் குழு ஊடாகத் தேவைப்படும் உதவிகள் வழங்கப்பட்டன. இதன்படி 2014 இறுதிப் பகுதியில் மீரிய

பெத்தவில் இடம்பெற்ற பாரிய மண்சரிவின்போது தேவையான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் 2015இல் நிறைவேற்றப்பட்டதுடன் 2015.04.25ஆந் திகதித நேபாளத்தில் பாரிய நில அதிர்வு ஏற்பட்டதன் பின்னர் அவசரகாலப் பதில் நடவடிக்கைக் குழுவானது அவசரகால நிலைமை கருமமாற்றும் பிரிவுக்கு வந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள இலங்கையர்களை இலங்கைக்கு வரவழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியை வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

3.9 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ www.dmc.gov.lk என்ற இணையத்தளத்தை இற்றைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பது மற்றும் அதனைப் பேணுவது இந்தப் பிரிவின் கடமைப்பொறுப்பு என்பதுடன் 2015இல் நிறுவனத்தில் ஏற்பட்ட அனைத்து பிரதான சம்பவங்களும் இந்த இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சகல அனர்த்தங்கள் தொடர்பான சகல விபரங்களும் நாளாந்தம் இணையத்தளத்தில் உள்ளடக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக www.drr.dmc.gov.lk என்ற இணையத்தளத் தொடர்பின் கீழ் கருத்திட்டம் தொடர்பான சகல தகவல்களும் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டதுடன் இவ்வாண்டில் 8 செய்திகள் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.10 Desinventor தரவுகள் களஞ்சியம்

அனர்த்தங்கள் தொடர்பான கடந்த காலத் தகவல்கள் அனைத்தும் உள்ளடக்கிய தரவுகள் வங்கிwww.desinventor.lk என்ற முகவரியில் சர்வதேச வலைப்பின்னலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு சம்பவங்களும் தொடர்பாக, மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றம் அனர்த்தங்களுக்கமையக் காலவரையறைகளுக்கமைய உயிரிழப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், சேதமடைந்த சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் இந்தத் தரவுகள் களஞ்சியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினூடாக அவசர கருமமாற்றும் பிரிவினால் வழங்கப்படும் தகவல்கள் இந்தத் தரவுகள் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1974 தொடக்கம் 2015 வரை அனர்த்தங்கள் தொடர்பான சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2012, 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வருடங்கள்	சம்பவங்கள்	தரவுகளின் அளவு
2012	16	512
2013	16	456
2014	13	456
2015	19	727

அட்டவணை 3.1: அனர்த்தங்கள் தொடர்பான கடந்த காலத் தகவல்கள்

4. தணித்தல், ஆராய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு.

4.1 அறிமுகம்

2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட பயங்கரச் சுனாமிப் பேரழிவினையடுத்துப் பதில் நடவடிக்கைகள் என்ற நிலையிலிருந்து மாறி அனர்த்த முகாமைத்துவத்துக்கு முன்னுரிமை வழங்கி நிறுவப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கடமை அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி, அபிவிருத்திப் பிரிவின் அடிப்படைக் கடமைப் பொறுப்பு அனர்த்தப் பாதிப்பு மதிப்பீடு, அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல் சம்பந்தமான கருத்திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தலாகும். அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தலுக்கான முறையை அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தில் சேர்த்தலின் மூலம் பாதுகாப்பான இலங்கை மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதலாகும்.

4.2 மாவட்ட அடிப்படையில் அனர்த்தங்களைக் குறைத்தல்

2014இல் ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழ் மட்டத்தில் இருந்ததாகவும் அனர்த்தங்கள் காரணமாக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களும் நாளாந்தம் அதிகரித்துள்ளன.

(அட்டவணை 4.1)

Desinventra தரவுகள்

அனர்த்தங்கள் (சம்பவங்கள்)	சம்பவங்களின் எண்ணிக்கை (2014)	மரணங்கள்	வீடுகளின் எண்ணிக்கை	பயிர்ச்செய்கைச் சேதங்கள்
வெள்ளம்	271	34	20092	-
வறட்சி	1	-	-	-
கடும் காற்று	182	2	3854	-

அட்டவணை 4.1: அனர்த்தங்கள் தொடர்பான கடந்த காலத் தகவல்கள்

இந்தக் காரணங்களைக் கருத்திற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கையினைக் கருத்திற்கொண்டதன் பின்னர் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான பிரிவுக்கு 2015ஆம் ஆண்டுக்காக 500 மில்லியன் ரூபாய் பொதுத் திறைசோியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(அட்டவணை 4. 2)

வருடம்	ஒதுக்கப்பட்ட பணம் (மில்லியன் ரூபாய்)
2011	114
2012	122
2013	274
2014	500
2015	500

அட்டவணை 4.2: ஒதுக்கப்பட்ட பணம்

2015ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒவ்வொரு விபத்துக்களையும் கருத்திற்கொள்ளும் போது அந்த அனர்த்தத்தினால் ஏற்படும் சேதங்களைக் கருத்திற்கொள்ளும் போது இந்தப் பிரிவில் ஒதுக்கப்பட்ட பணம் 4.2 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அனர்த்தம்	மாவட்டம்	நிதி ஒதுக்கங்களின் அளவு (மில்லியன் ரூபாய்)			
		2012	2013	2014	2015
வெள்ளம்	களுத்துறை	-	3	7	10
	காலி	1	10	8	4.1
	மாத்தறை	-	1	-	0.5
	அம்பாந்தோட்டை	2	96	121	14.5
	புத்தளம்	-	2	17	17.6
	இரத்தினபுரி	30	3	1	2.6
	குருநாகல்	-	13	9	41.4
	நுவரெலியா	-	3	4	1.9
	மாத்தளை	-	10	1	12.6
	கிளிநொச்சி	6	1	23	-
	முல்லைத்தீவு	-	7	-	-
	கேகாலை	-	13	1	-
	அநுராதபுரம்	4	-	1	8.3
	கொழும்பு	-	-	11	-
	கம்பஹா	-	-	8	60.2
	திருகோணமலை	-	-	17	5
	பொலன்னறுவை	-	-	14	63.3
	பதுளை	-	-	10	-
	மட்டக்களப்பு	-	-	4	3.8
	மன்னார்	11	-	26	-
	கண்டி	7	-	23	42
	மொனராகலை	-	-	10	-

	வவுனியா	-	-	6	1.4
	யாழ்ப்பாணம்	14	-	-	-
	அம்பாறை	-	-	-	6.4
மொத்தம்		**75**	**162**	**322**	**296**
வறட்சி	அம்பாந்தோட்டை	2	25	41	9.3
	புத்தளம்	-	3	3	-
	கண்டி	-	4	-	-
	மொனராகலை	-	2	9	4.4
	வவுனியா	19	7	10	4
	குருநாகல்	-	-	4	97.6
	திருகோணமலை	-	-	1	2
	பொலன்னறுவை	-	-	7	-
	அம்பாறை	-	-	5	-
	முல்லைத்தீவு	-	6	-	6
	கிளிநொச்சி	3	-	-	4.7
	அநுராதபுரம்	-	-	-	4.2
	பதுளை	-	-	-	0.9
	யாழ்ப்பாணம்	-	-	-	30
	மாத்தளை	-	-	-	7.6
மொத்தம்		23	47	80	171
விலங்கின் தாக்குதல்	மாத்தறை	-	-	6	-
	அம்பாந்தோட்டை	-	-	-	0.6
மொத்தம்		0	0	6	0.6
நிலையற்ற சரிவுகளைப் பலப்படுத்தல்	கண்டி	0.8	1	-	-
	பதுளை	1	1	6	-
	நுவரெலியா	93	6	0.2	-
	மாத்தளை	-	37	-	-
	கேகாலை	-	-	6	-
	இரத்தினபுரி	-	-	2	3.4
	காலி	-	-	-	1.5
மொத்தம்		94.8	45	14.2	4.9

அட்டவணை 4.3: ஒதுக்கப்பட்ட பணம்

2015ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியாகும் போது இந்தக் கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றங்களில் பௌதிக முன்னேற்றம் 90% ஆகும். நிதி முன்னேற்றம் 100% ஆகும் என்பதுடன் இந்தக் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

<table>
<tr>
<td>
வெள்ளத் தடுப்பு- கண்டி</td>
<td>
எலுக்குப்புல் அணைக்கட்டு – பொலன்னறுவை</td>
</tr>
<tr>
<td>
வறட்சிப் பாதிப்பைக் குறைப்பதற்கான குளாய் நீர்க் கிணறுகள் – வவுனியா</td>
<td>
மண்சரிவினைக் கட்டுப்படுத்துவதற்கான வடிகான் – உடுநுவர</td>
</tr>
</table>

அனர்த்தத் தடுப்புக்கான குறுகிய காலத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த நிதி ஆபத்தான நிலையில் உள்ள கற்களை அப்புறப்படுத்தல், வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்குச் சேதங்கள் ஏற்படுமாறு புரண்டுள்ள கற்களை அகற்றுதல், வீதிகளுக்குக் குறுக்கே வீழ்ந்துள்ள மரங்கள், மண் என்பவற்றை அகற்றுதல், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சிறிய பாலங்களைப் புனரமைத்தல், அவசர பாதிப்புக்களின்போது அந்த அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய சேதங்களை இல்லாமல் செய்தல் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு எடுத்தல் அல்லது அவ்வாறான செலவுகளை ஏற்றல், வாவி, அணைக்கட்டுக்கள், தடுப்புச் சுவர்கள் என்பன சேதமடையக்கூடிய நிலைமையின்போது அவற்றைப் பலப்படுத்தக் கூடிய

நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல், அனர்த்த பாதிப்புக்களைக் குறைப்பதற்கான உபகரணங்களைக் (மண்வெட்டி, பாரிய கத்திகள்) கொள்வனவு செய்தல், கிணறுகளைத் துப்பரவு செய்வதற்கான தண்ணீர்ப் பம்புகளை வாடகைக்கு வாங்குதல், திடீர் அனர்த்தங்களினால் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல் போன்ற அனர்த்தப் பாதிப்புக்களைக் குறைத்தல் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதுவரை 50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கம் நிலையத்துக்குக் கிடைத்துள்ளதுடன் இதில் 24 மில்லியன் ரூபாய் அட்டவணை 05இல் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்தங்களைக் குறைப்பதற்காக மாவட்ட மட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டம்	வழங்கப்பட்ட நிதி ஒதுக்கம் (ரூபாய்)
மொனராகலை	**77,100.00**
புத்தளம்	**2,441,000.00**
கொழும்பு	**650,000.00**
அம்பாந்தோட்டை	**698,853.71**
கண்டி	**1,865,037.50**
மாத்தளை	**1,810,325.00**
பதுளை	**789,444.70**
கேகாலை	**1,549,340.43**
நுவரெலியா	**2,219,815.91**
வவுனியா	**300,000.00**
மாத்தறை	**245,271.00**
திருகோணமலை	**1,500,000.00**
களுத்தறை	**500,000.00**
அநுராதபுரம்	**1,555,357.50**
இரத்தினபுரி	**244,909.90**
குருநாகல்	**500,000.00**
யாழ்ப்பாணம்	**531,000.00**
கிளநொச்சி	**1,052,000.00**
காலி	**89,482.00**
மன்னார்	**500,000.00**
முல்லைத்தீவு	**500,000.00**
கம்பஹா	**148,900.00**
விமானப்படை	**4,129,568.21**
மொத்தம்	**23,897,405.86**

அட்டவணை **4.4:** ஒதுக்கப்பட்ட பணம்



அவசரச நிலைமை பதில் நடவடிக்கை – மாத்தறை



அவசரச நிலைமை பதில் நடவடிக்கை – களுத்துறை



அவசரச நிலைமை பதில் நடவடிக்கை – கேகாலை



அவசரச நிலைமை பதில் நடவடிக்கை – நுவரெலியா

4.3 பாணந்துறை வெள்ளப்பெருக்கு அனர்த்த தடுப்புக் கருத்திட்டம்

பாணந்துறைப் பிரதேச செயலகப் பிரிவு சிறு மழையின்போது கூட நகரம் வெள்ளத்தில் மூழ்குவதுடன் இது தொடர்பான விசேட கவனம் செலுத்தி 139 மில்லியன் ரூபாய் பெறுமதியான கருத்திட்டமொன்று 2012ஆம் ஆண்டு தொடக்கம் 03 வருடங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்போது மோட கால்வாய், கெல்பன் கால்வாய் தடைப்படுதல், கால்வாயின் இரு மருங்கிலும் மக்கள் குடியமர்தல், கால்வாய் உரியவாறு புனரமைக்கப்படாமை இந்த வெள்ளப்பெருக்கிற்குக் காரணம் என இனங்காணப்பட்டுள்ளது. இதன்படி அனுமதிக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தக் களுத்துறை மாவட்டச் செயலகத்துடன் ஒருங்கிணைந்து தாழ் நிலைங்களை நிரப்புதல், அபிவிருத்தி செய்தல், கால்வாய் என்பன புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. 03 வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டத்துக்காக 35 மில்லியன் ரூபாய் பணம் 2015ஆம் ஆண்டுக்கான கருத்திட்டத்தின் மொத்த நிதி முன்னேற்றம் 90% ஆகும் என்பதுடன் 2014ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்கான செலுத்தல்களை மேற்கொள்வதற்குப் போதுமான நிதி ஒதுக்கம் கிடைக்காமையினால் 2015ஆம் ஆண்டு நிதி இதற்காகப்

பயன்படுத்தப்பட்டது. 2015இல் உத்தேச பணிகளில் 90% ஆனவை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அனுமதியில்லாமல் குடியேறியுள்ளவர்களை அப்புறப்படுத்தல், சமூகத்தினரிடமிருந்து எழும் பிரச்சினைகள் காரணமாகக் குறிப்பிட்ட இலக்கினை அடையமுடியவில்லை.

4.4 தம்புள்ள வெள்ளப் பெருக்குத் தடுப்புக் கருத்திட்டம்

மிரிஸ்கோணிய கால்வாய் மற்றும் தம்மென்னா கால்வாய் தடைப்பட்டதனால் தம்புள்ள பொருளாதார கேந்திர நிலையம் தம்புள்ள மருத்துவ மனை, தம்புள்ள கம் உதா காணி உட்படப் பல பொருளாதார, சமூக நிலையங்கள் மடைக்காலங்களில் வெள்ளப்பெருக்கில் மூழ்கின்றன. இது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கையைக் கருத்திற்கொண்டு 60 மில்லியன் ரூபாய்க்கான நிதி, வெள்ளத் தடுப்புக்காக ஒதுக்கப்பட்டதுடன் கருத்திட்டத்தை 2012 தொடக்கம் 03 வருடங்களுக்குள் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 2015இல் 20 மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டதுடன் 2014இல் மேற்கொண்ட பணிகளுக்காகச் செலுத்தல்களை மேற்கொள்ளப் போதிய பணம் செலுத்தப்படாமையினால் 2015ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் இதற்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும் 2015இல் இந்தக் கருத்திட்டத்தின் 3வது கட்டத்துக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன் பெறுவார்கள். 2012 தொடக்கம் இந்தப் பிரதேசத்தில் பெய்யும் மழைக் காலநிலையாலும் வெள்ளத்தாலும் இந்தப் பிரதேசம் பாதிக்கப்படவில்லை. அனர்த்த சேதங்கள் ஏற்படாமை, நிவாரணங்களுக்கான செலவினங்கள் ஏற்படாமை, மக்களின் பொருளாதார, சமூக, உள ரீதியிலான நிலைமைகளை ஸ்திரமாகப் பேணமுடிந்தமை போன்ற பிரதான காரணங்களினால் இந்தத் திட்டமானது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வளங்களைப் பாதுகாப்பதற்கும் உதவியது.

4.5 யாழ்ப்பாணத்தில் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தைத் தடுப்பதற்கான கருத்திட்டம்

சமவெளிப் பிரதேசமான யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர் வழிந்தோடுதல் மிகவும் மெதுவாகவே இடம்பெறுகின்றது. இந்தப் பிரதேசத்தில் மழை நீரை முகாமைத்துவம் செய்வதற்காக ஆங்காங்கே சிறு குளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

கடந்த யுத்த சூழ்நிலையில் இந்தச் சிறிய குளங்கள் மற்றும் வடிகால்கள் பராமரிப்பற்ற நிலையில் இருந்தன. இதனால் வெள்ளப்பெருக்கு உட்படப் பல அனர்த்தங்களை மக்கள் எதிர்நோக்கினார்கள். இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு அனர்த்த தடுப்புப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கையின்படி 03 வருடங்களுக்காக 120 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கமொன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 2012இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்துக்காக 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முறையே 12, 35 மற்றும் 50 மில்லியன் ரூபாய்ப்படி வழங்கப்பட்டதுடன் 2014ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காகச் செலுத்தல்களைச் செய்வதற்கு இந்தப் பணம் போதுமானதல்ல என்பதனால் 2015இல் ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் ரூபாயில் 15 மில்லியன் ரூபாய் 2014இல் செலுத்தல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. 2015இல் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் 100% ஆனவற்றில் பௌதிக ரீதியிலான முன்னேற்றத்தைக் காணமுடிந்தது. இந்தக் கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 100% ஆகும். இந்தத் திட்டத்தின் மூலம் பெருமளவான மக்கள் பயனடைந்துள்ளனர்.

4.6 அனர்த்தங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தில் உள்வாங்குதல்

அனர்த்த நிலைமைகள் பல்வேறு விடயங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதுடன் நிலைபேறான அவிருத்திக்கு இந்த அனர்த்தத் தடுப்பானது மிகவும் முக்கியமாகும். இது தொடர்பாகக் கவனம் செலுத்தி வீடுகளை நிர்மாணிக்கும்போது அனர்த்த ஆபத்துக்களை முடியும்வரை குறைப்பதற்காகத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஆகியன அனர்த்த முன் ஆயத்தப் பிரிவுடன் இணைந்து குறிப்பிட்ட பங்காளர் நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது சுமார் 300 உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 650 பேருக்கு அனர்த்தங்களைத் தாக்குப்பிடிக்கும் வீடுகளை நிர்மானிப்பது தொடர்பாகப் பயிற்சியளித்தல் இலங்கை உள்ளூராட்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டதின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வழிகாட்டல் வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் பாதுகாப்பான நகரங்களுக்கான திட்டத்தை வகுத்தல் கருத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தித் திட்டமிடல்களுக்கான வழிகாட்டலும் செய்யப்பட்டுள்ளன.


5. முன் ஆயத்தப் பிரிவு

5.1 அறிமுகம்

தேசிய இடர் முகாமைத்துவத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஒருங்கிணைத்தல், இடர் முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக வழிகாட்டல், தயாரித்தல் 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் தொடர்பாகப் பொறுப்பினை ஏற்றுள்ள முன் ஆயத்தப் பிரிவானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். மேலும் அனர்த்தங்களுக்கான முன் ஆயத்தம் மற்றும் அவசர நிலைமை பதில் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மீட்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் அனர்த்தப் பணிகளை ஒருங்கிணைத்தல் என்பன இந்தப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. பருவப் பெயர்ச்சிக் கால நிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் முன் ஆயத்தத் திட்டமிடல் பிரிவினால் எந்தவோர் அனர்த்த நிலைமையையும் எதிர் கொள்வதற்காக நிறுவனத்துக்கான ஆயத்த நிலையை உறுதிப்படுத்துவதற்காக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் முன் ஆயத்த அப்பியாசங்களை நடைமுறைப்படுத்துதல்.


தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் முன் ஆயத்த நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் முறையே 08 மில்லியன், 10 மில்லியன், 12 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட நிதி

ஒதுக்கங்கள் செலவு செய்யப்படுவது தொடர்பாக ஒப்பிடப்பட்டமை அட்டவணை 5.1 மற்றும் வரைபட இல.5.1இல் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை 5.1: அனர்த்த முன் ஆயத்தங்களுக்காகக் கடந்த வருடங்களில் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் செலவினம்

2015ஆம் ஆண்டு 25 மாவட்டங்களில் அனர்த்தங்களுக்காக முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக 12 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமைகள் மற்றும் இதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு மாவட்டங்களுக்கு நிதிகள் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களுக்கிடையில் நிதி ஒதுக்கம் வழங்கப்படல் தொடர்பாக அட்டவணை 6.2இல் காட்டப்பட்டுள்ளது.




வரைவடம் 5.2: முதலாவது நிதி ஒதுக்கம் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளித்தல்

வருடம்	திறைசோியினால் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கம்	செலவினம்
2013	**8.00**	**7.89**
2014	**10.00**	**9.20**
2015	**12.00**	**11.11**

அட்டவணை 5.1: திறைசோியினால் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கம்

மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவு அடிப்படையில் இடர் முகாமைத்துவ சாத்தியத் தன்மையைப் பலப்படுத்துவதற்கான முன் ஆயத்தத் திட்டமிடும் பிரிவினால் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டத்தை அச்சிடுதல்/ மீளாய்வு செய்வதற்கான பங்காளி நிறுவனங்களின் கூட்டங்கள், செயலமர்வுகள் என்பவற்றுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் மட்டத்தில் நிதிகள் ஒதுக்கப்பட்டன. தொிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களுக்குள் நிலையான நகர நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்காக இந்தப் பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது. சுனாமி, வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்த ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்துதல், அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான வரைபடங்கள், அனர்த்த ஆபத்து நிலைமைகள் தொடர்பான பகுப்பாய்வு, கிராம மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை ஏற்படுத்தல் போன்ற சமூக மட்டத்திலான அனர்த்த பதில் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அணைக்கட்டுக்கள், தடுப்புச் சுவர்கள் உடைவதை முன் கூட்டியே தடுத்தல், நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைந்துள்ள இடத்துக்குத் தாழ்வாக வசிக்கும் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் அவசர நிலைமைகளின் போது பதில் நடவடிக்கையினை எடுக்கக் கூடிய வகையில் மக்களின் பங்களிப்புடனான முன் ஆயத்தத் திட்டங்களைத் தீட்டுவதற்காக இந்தப் பிரிவினால் நிதி ஒதுக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த நிதி ஒதுக்கங்களின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளுக்காக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டவிதம் வீத அடிப்படையில் பின்வருமாறு வரைபடம் 5.3 : இல் காட்டப்பட்டுள்ளது.



வரைபடம் 5.3 : பல்வேறு நடவடிக்கைகளுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி மொத்த நிதி ஏற்பாட்டின் நூற்று வீதத்தில்

5.2. மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த முன் ஆயத்தம் மற்றும் அவசரகால நிலைமை பதில் நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல்.

அனர்த்தம் ஏற்பட்டால் அல்லது அனர்த்தம் ஏற்படும்போது அது தொடர்பான பதில் நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட அடிப்படையிலான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக உதவும் ஒரு செயலாற்று ஆவணமாக மாவட்ட அனர்த்த முன் ஆயத்த மற்றும் அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைத் திட்டத்தைக் குறிப்பிடலாம். மாவட்டத்தில் எற்படும் அனர்த்தங்களுக்காகப் பதில் நடவடிக்கையினை மேற்கொள்ளும் மிகவும் உயர் மட்டத்திலுள்ள முகாமைத்துவ நிறுவனமாக மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்புக் குழுவினைக் குறிப்பிடலாம். இந்தக் குழுவில் துணைக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இதில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. நிர்வாகப் பிரிவு, காணப்படும் இடர்கள், ஆபத்து நிலைமைகளின் பெறுபேறுகள், மேற்கொள்ளப்பட்ட அனர்த்த ஆபத்து நிலைமை மதிப்பீடுகள், பிரதான இடங்கள் தொடர்பாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதம், பிரதேசத்தில் உள்ள பௌதிக மற்றும் மனித வளங்கள், அனர்த்த பதில் நடவடிக்கைப் பொறிமுறை தொடர்பான பல்வேறு பங்காளி நிறுவனங்களின் பொறுப்புக்கள் தொடர்பாக இந்தத் திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2015 டிசம்பர் மாதம் ஆகும்போது மாவட்ட அனர்த்த முன் ஆயத்தம் மற்றும் அவசரகால நிலைமை பதில் நடவடிக்கை தொடர்பான 25 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. அதேபோன்று 2015இல் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து பிரதேச அனர்த்த முன் ஆயத்தம் மற்றும் அவசரகால நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் செயல்முறை முன்னெடுக்கப்பட்டது. பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தலை ஆரம்பிப்பதற்காக அவற்றை அறிமுகப்படுத்துவதற்காக 41 செயலமர்வுகள் நடத்தப்பட்டன. பிரதேச அனர்த்த முன் ஆயத்த அவசர நிலைமை பதில் நடவடிக்கைத் திட்டங்களின் இறுதி வரைவினைப் பங்காளி நிறுவனத்துக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குள் செயலமர்வுகள் நடத்தப்பட்டதுடன் அது தொடர்பான தகவல்கள் அட்டவணை 6.2இல் காட்டப்பட்டுள்ளது.

	மாவட்டம்	ஆரம்பச் செயலமர்வு		இறுதிச் செயலமர்வு	
		செயலமர்வு எண்ணிக்கை	பிரதேச செயலகம்	செயலமர்வு எண்ணிக்கை	பிரதேச செயலகம்
1	களுத்துறை			03	களுத்துறை, பண்டாரகம, மத்துகம
2	கம்பஹா	02	மீரிகம, நீர்கொழும்பு		
3	காலி	03	வெலிபிட்டிய, திவிதுர, கரன்தெனிய, நியாகம	01	கோனபீனுவல
4	கண்டி	02	உடபலாத்த, மெதும்பர		
5	மாத்தளை	02	உக்குவெல, மாத்தளை	03	மாத்தளை, ரத்தோட்ட, உக்குவெல
6	இரத்தினபுரி	06	இரத்தினபுரி மாவட்டச் செயலகம், எம்பிலிபிட்டிய, எஹலியகொட, நிவித்திகல, அயகம	05	கிரி எல்ல, பலாங்கொடை, வெலிகெபொல, எலபாத்த, இரத்தினபுரி
7	குருநாகல்	06	வீரம்புகெதர, மல்லவபிட்டிய, பமுணுகொட்டுவ, குளியாபிட்டிய. வெரல்லகம, கல்கமுவ	03	மல்லபிட்டிய, பமுணுகொட்டுவ, வீரம்புகெதர

8	அநுராதபுரம்	**02**	நாச்சதூவ, தலாவ		
9	மன்னார்	**03**	மன்னார் மாவட்டச் செயலகம், சிலாவத்துறை	**02**	மடு, மன்னார்
10	திருகோணமலை	**05**	வெருகல் நகரமும் பட்டினமும், ஸ்ரீபுர, மொரவெவ, கோமரன் கடவல.		
11	மட்டக்களப்பு			**02**	போரைதீவுப்பற்று, காத்தான்குடி
12	மொனராகலை	**03**	கதிர்காமம், மெதகம, வெல்லவாய	**02**	மாவட்டச் செயலகம் வெல்லவாய, கதிர்காமம்
13	யாழ்ப்பாணம்	**03**	டெல்ப், கோப்பாய், கரவெட்டி	**03**	வேலணை, கரவெட்டி, காரைநகர்
14	வவுனியா	**03**	வவுனியா தெற்கு, வவுனியா, வவுனியா வடக்கு	**02**	வவுனியா, வவுனியா வடக்கு
15	அம்பாந்தோட்டை	**01**	வெலி அத்த	**01**	வெலி அத்த
மொத்தம்		**41**		**27**	

அட்டவணை **5.2: பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டம்** தயாரித்தல் செயலமர்வு





5.3. கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் சமூக முன் ஆயத்த, அவசர நிலைமை பதில் நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தல்.

கிராமங்களில் நிலவும் பல்வேறு இடர்களைக் கவனத்திற்கொண்டு சமூக அனர்த்த முன் ஆயத்தம் மற்றும் அவசர நிலைமை பதில் நடவடிக்கைத் திட்டங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவ மட்டத்தில் தயார் செய்யப்பட்டன. மக்களின் கலந்து கொள்ளல் மற்றும் சமூக அடிப்படையிலான அனர்த்த வரைபடங்களைத் தயாரித்தல் என்பன கிராம

உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்திலான திட்டங்களைத் தீட்டும் நடவடிக்கையின் பிரதான பணிகளாகும். மேலும் சமூக மட்டத்திலான வரைபடங்களைத் தயாரித்தல், பாதுகாப்பான பாதைகள் மற்றும் பாதுகாப்பான இடங்களை இனங்காணுதல், முதலுதவி, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களை அமைத்தல் மற்றும் முகாம்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. 2015இல் சகல மாவட்டங்களிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 236 பதில் நடவடிக்கை தொடர்பாக 236 பிரசாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதுடன் அதன் பௌதிக முன்னேற்றம் 100% ஆகும்.




யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற கிராமிய முன் ஆயத்தத் திட்டங்களைத் தயரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.


5.4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் ஒத்திகைகளை நடத்துதல்.

2015ஆம் ஆண்டுக்குள் சுனாமி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் பொிதும் இடம்பெற்ற மாவட்டங்களில் அவசர நிலைமைகளின் போது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வது தொடர்பாக ஒத்திகை நடத்தப்பட்டதுடன் 122 சுனாமி ஒத்திகைகளும் மண்சரிவு தொடர்பான 92 ஒத்திகைகளும் வெள்ளப்பெருக்குத் தொடர்பாக 37 ஒத்திகைகளும் என்ற வகையில் மொத்தமாக 251 ஒத்திகைகள் நடத்தப்பட்டன.


	மாவட்டம்	சுனாமி ஒத்திகை	வெள்ளப்பெருக்கு ஒத்திகை	மண்சரிவு ஒத்திகை
1	கொழும்பு	8	1	
2	கம்பஹா	6	2	
3	களுத்துறை	12	2	7
4	மாத்தறை	4	2	5

5	காலி	9		5
6	அம்பாந்தோட்டை	7		
7	இரத்தினபுரி		4	8
8	கேகாலை			6
9	பதுளை			34
10	மொனராகலை		1	
11	நுவரெலியா			11
12	கண்டி			8
13	மாத்தளை		3	8
14	புத்தளம்	7		
15	குருநாகல்			
16	அநுராதபுரம்			
17	பொலன்னறுவை			
18	அம்பாறை	13		
19	மட்டக்களப்பு	8	5	
20	திருகோணமலை	9		
21	வவுனியா		7	
22	மன்னார்	12	1	
23	கிளிநொச்சி	6	7	
24	யாழ்ப்பாணம்	11	1	
25	முல்லைத்தீவு	10	1	
		122	37	92

அட்டவணை 5.3: மாவட்டங்களில் இடம்பெற்ற ஒத்திகை நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் சுருக்கமாக



சுனாமி ஒத்திகையின்போது ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லல்



5.5 பாரிய நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் போன்றவற்றில் அனர்த்தங்கள் தொடர்பான முன் ஆயத்த நிகழ்ச்சித் திட்டங்கள்

சூறாவளி அல்லது நில அதிர்வு ஏற்படும்போது அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்து அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களைக் கவனத்திற்கொண்டு பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்களுக்கு அண்மித்து வாழும் மக்களின் முன் ஆயத்த ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டுக்கான அணைக்கட்டுக்களை அண்மித்தவர்களுக்காக 30 ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. முதலுதவி, முகாம்களை முகாமைத்துவம் செய்தல், கிராமங்களின் பாதுகாப்புப் போன்ற விடயங்கள் சம்பந்தமாகத் துணைக்குழுக்களை ஏற்படுத்தல், முன்னெச்சரிக்கை தொடர்பான பிரசாரப் பொறிமுறையொன்றை ஏற்படுத்தல், சமிக்ஞை பலகைகளைப் பொருத்துதல், இறுதியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை அழைத்துச் செல்லல் தொடர்பாக ஒத்திகை நிகழ்ச்சிகள் மூலம் நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்களுக்குத் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்காக அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் இதில் உள்ளடங்கியிருந்தன.

5.6 நாட்டுக்குள் வெள்ளத்தில் மூழ்குவதனால் ஏற்படும் மரணங்களின் ண்ணிக்கையைக் குறைத்தல்.

நாட்டில் நீரில் மூழ்குவதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளில் அதிகரித்த நிலையில் காணப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் அவ்வாறான

ஆபத்துக்கள் உள்ள பிரதேசங்களில் சமிக்ஞை பலகைகளைக் காட்சிப்படுத்தலாகும். அதன் மூலம் ஆபத்துள்ள வாவிகள், ஆறுகள் மற்றும் குளங்களில் நீராட வேண்டாமென மக்களுக்கு அறிவூட்டப்படுகின்றது. இரதத்தினபுரி, மொனறாகலை, மாத்தளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் களுகங்கை, பொல்ஹேன மற்று நுவரவாவி, திஸ்ச வாவி என்பவற்றுக்கு அருகில் இந்தச் சமிக்ஞை பலகைகள் பொருத்தப்பட்டன. இதுவரை 57 சமிக்ஞை பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.



5.7 பருவக்காற்று முன் ஆயத்தத் திட்டங்கள்

தென்மேற்கு, வடகிழக்கு பருவக்காற்றுடன் பருவக்காற்றுடன் ஏற்படும் மழை காரணமாக அனர்த்த நிலைமைகள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதன் தாக்கங்கள் காணப்படும் மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் முன் ஆயத்தத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

தேசிய ரீதியாக 03 முன் ஆயத்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இவற்றில் இரண்டு அனர்த்த முகாமைத்துவத்துக்காக நிறுவப்பட்டுள்ள அவசரகால கருமமாற்றும் குழுக்களைக் கூட்டி அவசரகால நிலைமைகளின் போது பதில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அவர்களுக்கு அறிவூட்டப்பட்டது. தேசிய ரீதியாக நடத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடகங்களுக்கு அறிவூட்டுவதாகும். தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவக்காற்று வீசும் மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பங்காளி நிறுவனங்கள் அவசர நிலைமையின்போது பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்காக இவ்வாறான 19 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியதுடன் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 69 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தின.

5.8 வைத்தியசாலைகளில் திடீர் அனர்த்த முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரித்தல்

வைத்தியசாலைகள் தொடர்பாகத் திடீர் அனர்த்த முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரிப்பதன் பிரதான நோக்கம் வைத்தியசாலைப் பணியாளர்களின் பாதுகாப்பு, நோயாளர்களின் பாதுகாப்பு, திடீர் அனர்த்தங்களின்போது வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சைகள் வழங்குவதற்கும் பதில் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் முடிந்த வகையில் திட்டங்களைத் தயாரித்தலாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்போது வைத்தியசாலையில் மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களை இனங்கண்டு அந்தத் தகவல்களை வரைபடத்தில் உள்ளடக்கி அதன்படி அனர்த்தங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல், அறிவூட்டல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்தல் தொடர்பாகத் தகவல்களை உள்ளடக்கிய திட்டம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.



5.9 பாடசாலை அனர்த்த தற்பாதுகாப்புத் திட்டம்

கல்வி அமைச்சுடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனர்த்த ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 25 மாவட்டங்களில் 76 நிகழ்ச்சித் திட்டங்கள் 2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள் என்பவர்களுடன் இணைந்து பாடசாலையின் அனர்த்த வரைபடமொன்றைத் தயாரித்தல் வேண்டும். அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டல் மற்றம் ஒத்திகை என்பவற்றை நடத்துதல் இதன் நோக்கமாகும்.

5.10 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட எனைய முன் ஆயத்த செயற்பாடுகள்

5.10.1 பதுளை மாவட்டத்தில் அனர்த்த ஆபத்து வரைபடங்கள் மற்றும் 5 ஆண்டு மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்

பதுளை மாவட்டம் அனர்த்தங்கள் கூடிய மாவட்டமாக இருப்பதுடன் விசேடமாக, மண்சரிவுட, வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ மற்றும் யானைகளின் தொல்லைகள் என்பன இடம்பெறுகின்றன. இந்த அனர்த்தங்களில் மண்சரிவு அதிகமாக இடம்பெறும் மாவட்டமாகப் பதுளை மாவட்டம் கட்டிட ஆராய்ச்சி ஆய்வு நிலையத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இதற்குப் பெரும்பாலும் இயற்கையைவிட மனிதர்களின் செயற்பாடுகளே காரணமாக இருந்துள்ளன.

பதுளை மாவட்டத்தில் உள்ள அனர்த்த பிரதேசங்களை இனங்கண்டு அதன்படி அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பது பிரதான நோக்கமாகும். இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதற்காகப் பதுளை மாவட்டத்தில் சகல நிறுவனங்களின் பங்களிப்புப் பெற்றுக்கொள்ளப்படும். இதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணை கிடைப்பதுடன் ஆரம்ப வேலைகள் 2015இல் தொடங்கியுள்ளதுடன் 2016 ஜூன் மாதமாகும்போது நிறைவடையும்.

5.10.2 சமூக அடிப்படையிலான அனர்த்த ஆபத்து முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலைத் தயாரித்தல்

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. விசேடமாக, மண்சரிவு, வெள்ளம், வறட்சி என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. இலங்கையில் சமூக அடிப்படையிலான அனர்த்த ஆபத்து முகாமைத்துவம் தொடர்பாக வழிகாட்டல்கள் சில அரச சார்பற்ற நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டுக் கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்தி செயற்பாட்டின்போது அந்தத் திட்டங்களில் அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான எச்சரிக்கைகள் உள்வாங்கப்படாமையினால் அனர்த்தங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது. இவ்வாறான காரணங்களினால், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்த வழிகாட்டல்கள் நடைபெற்றன.

இந்தச் சமூக அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்களைத் தயார் செய்யும்போது காலநிலை மற்றும் சூழல், சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம், பௌதிகம் போன்ற பல்வேறு விடயங்கள் உள்வாங்கப்பட்டன. இந்த வழிகாட்டல்களைத் தயாரிப்பதற்காக அரச சார்பற்ற நிறுவனமான DEPICO வினால் அனுசரணை வழங்கப்பட்டது.

5.10.3 ஒத்திகை நிகழ்ச்சித் திட்டங்களின் பொருட்டு வழிகாட்டல்களைத் தயாரித்தல். (Simulation Guideline)

2015இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனுசரணையுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மண்சரிவு, வெள்ளம், சுனாமி போன்ற அனர்த்தங்களுக்காக ஒத்திகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன.

இதன்படி தொிவு செய்யப்பட்ட 06 மாவட்டங்களில் அதாவது புத்தளம், பொன்னறுவை, அம்பாறை, மொனறாகலை, மாத்தளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உத்தியோகத்தர்கள் அனர்த்தங்களின்போது மாவட்ட முகாமைத்துவத் திட்டத்துக்கமையப் பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதத்தைக் காட்டும் ஒத்திகையை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (Table Top Exercise)

இலங்கையில் சமூக அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சில வழிகாட்டல்கள் அரச சார்பற்ற நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

6 அறிவூட்டும் பிரிவு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிவூட்டல் பிரிவு நிறுவகத்தின் உள்ளக ஆளணியினரின் ஆற்றல் விருத்திற்காகப் பயிற்சி நடவடிக்கைகளைத் திட்டமிட்டுள்ளதுடன் அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், முப்படையினர், பொலிசார், சிவில் பாதுகாப்புப் பிரிவினர் உட்பட அரச சார்பற்ற பங்காளி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்காகக் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்

திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய மட்டத்திலும் கிராம மட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2015ஆம் ஆண்டு பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 15 மில்லியன் ரூபாவுக்கான நிதி ஒதுக்கங்கள் பொதுத் திறைசோியினால் அனுமதிக்கப்பட்டது. இந்தப் பணம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு 2015 மே மாதத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டதனால் 2015ஆம் ஆண்டுக்கான செயலாற்றுத் திட்டத்தைத் திட்டமிட்டதுபோல் நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனினும், 2015ஆம் ஆண்டு தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களைப் போன்று மாவட்ட அடிப்படையிலான 544 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

6.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினரின் ஆற்றல் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்

பயிற்சி மற்றும் அறிவூட்டும் பிரிவினால் அனர்த்த முகாமைத்துப் பொறிமுறையைச் செயற்றிறனுடனும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினருக்கு நவீன தொழில்நுட்ப வசதியுடன் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2.5 மில்லியன் ரூபாய் நிலையத்துக்கு வழங்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கத்தைப் பயன்படுத்தி உதவிப் பணிப்பாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக சிற்றூழியர்கள் உட்படச் சாரதிகளுக்கும் 2015இல் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினர் சர்வதேச மட்டத்திலான பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளிலும் கலந்துகொண்டனர்.





6.2 அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

2015ஆம் ஆண்டு அறிவூட்டும் பிரிவினால் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுவதுடன் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கங்கள் தொடர்பான விபரங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொ.இல.	மாவட்டம்	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை
1	அநுராதபுரம்	**14**	**160,000.00**
2	அம்பாறை	**17**	**279,170.00**
3	பதுளை	**48**	**705,000.00**
4	மட்டக்களப்பு	**17**	**259,381.00**
5	கொழும்பு	**18**	**241,931.00**
6	காலி	**15**	**223,841.00**
7	கம்பஹா	**17**	**185,600.00**
8	அம்பாந்தோட்டை	**18**	**310,039.50**
9	யாழ்ப்பாணம்	**18**	**323,923.94**
10	கண்டி	**45**	**416,625.00**
11	குருநாகல்	**15**	**372,060.00**
12	கேகாலை	**18**	**319,318.00**
13	களுத்துறை	**18**	**250,500.00**
14	கிளிநொச்சி	**17**	**263,518.20**
15	மாத்தறை	**17**	**230,482.93**
16	மாத்தளை	**41**	**619,998.00**
17	மன்னார்	**20**	**287,050.00**
18	முல்லைத்தீவு	**18**	**144,751.00**
19	மொனராகலை	**18**	**283,341.00**
20	நுவரெலியா	**22**	**427,780.00**
21	புத்தளம்	**18**	**259,272.89**
22	பொலன்னறுவை	**21**	**752,556.00**
23	இரத்தினபுரி	**18**	**294,095.00**
24	திருகோணமலை	**17**	**177,590.50**
25	வவுனியா	**16**	**274,469.00**
			8,062,293.96
26	தலைமை அலுவலகம்	**23**	**331,759.51**
	மொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	**544**	
	செலவிடப்பட்ட தொகை		**8,394,053.47**

அட்டவணை 6.1: மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

6.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகத்தினால் தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பங்காளி நிறுவனங்களுக்கும் முப்படையினர் மற்றும் பொலிசாருக்கும் இந்தப் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




6.2.2 அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல்

அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறையைச் செயலாற்றுத் திறனுடனும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு தேவைப்படுகின்றது. இதன்படி தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் அரச உத்தியோகத்தர்களுக்காக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக 10 பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2015இல் நடத்தப்பட்டன.




6.2.3 பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்களின் உதவியுடன் சகல மாவட்டங்களிலும் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கும் 83 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி மற்றும்

அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இந்த அறிவினைப் பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக்கு நேரடிப் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதாகும்.




6.2.4 தேடுதல், மீட்பு மற்றும் பயிற்சி வழங்கல்

அனர்த்த நிலைமைகளின்போது மக்களை மீட்டல் ஒரு முக்கிய பணி என்பதுடன் தேடுதல், மீட்பு தொடர்பான பயிற்சிகள் நாடு முழுவதிலும் ஏனைய நிறுவனங்களின் உதவியுடன் 16 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




6.2.5 முப்படை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்

2015ஆம் ஆண்டு முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக 23 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




6.2.6 பாடசாலைகளில் இளைஞர் கொண்ட குழுக்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக்கு இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் நேரடிப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களைத் தொண்டர் அணியினராகத் தமது பாடசாலைகளிலும் சமுதாயத்திலும் நேரடியாகவே செயற்படுவதற்கான ஆற்றலையும் புரிந்துணர்வினையும் வழங்குவது இதன் மூலம் இடம்பெறுகின்றது. இதன்படி 2015ஆம் ஆண்டு பொலன்னறுவை மாவட்டத்தில் 100 மாணவர்களுக்கும் 50 இளைஞர், யுவதிகளுக்கும் தொண்டர் அணியினராகப் பயிற்சி வழங்கப்பட்டது.




6.2.7 முதலுதவிகள், முகாம் முகாமைத்துவத்துக்கான பயிற்சித் திட்டங்கள்

அனர்த்த நிலைமைகளின் போது அனர்த்தங்களுக்குள்ளாகும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் முதலுதவிகள் மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பாகப் பயிற்சித் திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மாவட்டச் செயலகங்கள் ஊடாகக் குறிப்பிட்ட குழுவினருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்படி 2015ஆம் ஆண்டு முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பான 44 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




6.2.8 மீனவ சமூகத்துக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்

காலநிலை மற்றும் வானவில் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் பல்வேறு பாதிப்புக்களிலிருந்து கடற்றொழிலாகர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அவ்வாறான அனர்த்தங்களின்போது செயற்படவேண்டிய விதம் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக மீனவ சமூகத்தினர் வாழும் மாவட்டங்களில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்படி 2015இல் மீனவ சமூகத்துக்காக 37 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.



6.2.9 கிராமிய அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனர்த்த பாதுகாப்பு வலயங்களில் நிறுவியுள்ள அனர்த்த முகாமைத்துவ கிராமக் குழுக்களை இற்றைப்படுத்தல் வருடாந்தம் இடம்பெறுகின்றது. இதன்படி 2015ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ கிராமியக் குழுக்கள்156 நிறுவப்பட்டன.





6.2.10 இடம்பெயர் கண்காட்சி வாகனங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடம்பெயர் கண்காட்சி வாகனங்களைப் பயன்படுத்திப் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமிய மக்களுக்கு அனர்த்த

முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.





7. அவசர கருமமாற்றும் பிரிவு

அவசர கருமமாற்றும் நிலையம் 2006ஆம் ஆண்ட ஆரம்பிக்கப்பட்டது. அது வாரத்தில் 07 நாட்களும் 24 மணித்தியாலங்களும் இயங்குகின்றது. ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பாகத் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் அவசர நிலைமைகளின் போதான நிலையத்துக்குக் கிடைப்பதுடன் குறிப்பிட்ட தகவல்கள் கிடைக்கவேண்டிய நபருக்குக் கிடைக்கச் செய்வதற்காக அந்த நிலைமைகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல் இந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் நாடு முழுவதிலும் இடம்பெறும் இயற்கையான மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் ஆபத்துக்கள் தொடர்பான சகல தகவல்களும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் சேகரிக்கப்பட்டு, நாளாந்தம் அறிக்கையொன்று தயாரிக்கப்படுவதுடன் அந்த அறிக்கை அனர்த்த செயலகம், பாதுகாப்பு அமைச்சு, பொதுத் திறைசோி, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் உட்பட சகல இலத்திரனியல் ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றது. அதேபோன்று மென்பிரதிகள் மின்னஞ்சல் ஊடாகக் குறிப்பிட்ட தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

மேலும் அனைத்து அனர்த்த நிலைமைகளின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முப்படையினர், பொலிசார், தீயணைப்புப் படையினர் உட்பட ஏராளமானவர்களைத் தொடர்புபடுத்திக்கொண்டு தேடுதல், மீட்புப் பணிகள்,

ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், வளங்களைப் பயன்படுத்தல், அவசர நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற பணிகள் இடம்பெற்று வருகின்றன.





7.1 வெள்ளப்பெருக்கின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2015 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் பதியப்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பாரதிக்கப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 62,052 ஆகும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் வேண்டுகோளுக்கமைய அவசர நிலைமைகள் கருமமாற்றும் பிரிவினால் பொலிசார் மற்றும் முப்படையினரின் உதவியினைப் பெற்று மீட்பு, மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல், அவசர கால நிவாரணங்களை வழங்குதல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

7.2 கடும் காற்று அனர்த்தத்தின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2015ஆம் ஆண்டில் 99 கடும் காற்று வீசிய சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதில் 1080 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்தல், வீதிகளைத் துப்பரவு செய்தல், தொடர்பாடல் மற்றும் மின்சார வசதிகளை வழங்கல், புனரமைத்தல், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் என்பன அவசரகால கருமமாற்றும் பிரிவுக்கு முடிந்தது. பருவக்காற்று ஆரம்பிப்பதற்கு முன்னர் தமது வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கு அருகில் உள்ள மரங்கள் மற்றும் கிளைகளை வெட்டி அப்புறப்படுத்திக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

7.3 வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் தொடர்பாக அவசர நிலைமைகளின்போது தேவைப்படும் பின்வரும் உபகரணங்களைக் கொள்வனவு செய்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. அந்த உபகரணங்கள் அவசர நிலைமைகளின்போது பயன்படுத்துவதற்காக 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளுக்கும், விமானப்படையினர், கடற்படையினர், பொலிசார் மற்றும் தீயணைப்புப் படையினர் ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

விபரம்	மொத்த நிதி 2015 (மில். ரூபாய்)
சங்கிலி அரிவாள்கள் 75 கொள்வனவு	5.79
33 எஞ்சின் படகுகள் கொள்வனவு	16.18
50 தோணிகள் கொள்வனவு	6.64
மீட்பு, தேடுதல் 4500 பைகள் கொள்வனவு	7.43
கையினால் இயக்கும் 241 சைரன் விசில்கள் கொள்வனவு	5.89
3000 கம் பூட்ஸ் கொள்வனவு	3.86
100 தண்ணீர் தாங்கிகள் (1000 லீற்றர்) கொள்வனவு	0.81

அட்டவணை 7.1: கொள்வனவு செய்த உபகரணங்கள்

7.4 தீ விபத்து அனர்த்தங்களின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2015 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை இலங்கையில் 37 தீ விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தீயணைப்புப் படையினர், பொலிசார், விமானப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் அந்தத் தீயினை அணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மனிதர்களுக்கு, சொத்துக்களுக்கு, உயிரினங்களுக்கு இவற்றினால் ஏற்படவிருந்த பெரும் சேதங்கள் இதன் மூலம் தவிர்க்கப்பட்டது. இதற்குச் சூழல் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கிராமத்து மக்களின் உதவிகளும் கிடைத்தன.

7.5 வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2015 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலவரையறைக்குள் 6 மாவட்டங்களில் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 73242 ஆகும். இதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால்

நிவாரணங்கள் வழங்கப்பட்டன. டிராக்டர்கள், பவுசர்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிநீரும் வழங்கப்பட்டன.

அனர்த்தம்	எண்ணிக்கை	பாதிக்கப்பட்ட		மரணங்கள் எண்ணிக்கை	காயமடைந்தவர்கள் எண்ணிக்கை	காணாமல் போனவர்கள் எண்ணிக்கை	சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை	
		குடும்பங்களின் எண்ணிக்கை	ஆட்களின் எண்ணிக்கை				முழுமையாக	அரைவாசி
வறட்சி		73242	258096	0	0	0	0	0
வெள்ளம்		62052	240065	15	18	1	431	5112
கடும் காற்று	99	1080	3987	0	4	0	99	925
அணைக்கட்டுக்கள் உடைதல்	38	144	659	2	6	0	33	57
பெருக்கெடுத்தல்	8	9061	30415	0	0	0	0	0
டோனாடோ	1	57	185	0	0	0	18	41
நீரில் மூழ்குதல்	24	14	38	36	2	6	0	0
இடி மின்னல்	44	51	188	23	11	0	1	31
மண்சரிவு	35	207	810	7	1	0	11	150
பாறைகள் சரிதல்	19	127	385	2	1	0	4	25
மொத்தம்		146035	534828	85	43	7	597	6341

மூலம் : Disinventra

அட்டவணை 7.2: 2015 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட தீவிபத்துக்கள்

7.6 முன்னறிவித்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்டப் பிரிவுகளில் மற்றும் கிராமிய மட்டத்திலான மக்கள் மத்தியில் அனர்த்தங்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை விடுத்தலும் அதனை மேலும் விரிவு படுத்துவதற்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது நாடட்டில் பல்வேறு பிரதேசங்களை உள்ளடக்கி முன்னெச்சரிக்கைக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. VHF முறை ஊடாகவும் தொடர்பாடல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை 77 முன்னெச்சரிக்கைக் கோபுரங்களை நிறுவி அதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. DEWN குறுஞ் செய்திக் கட்டமைப்பினைப் புதுப்பித்துத்

தலைமைக் குழுக்களின் முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிட்ட தகவல்களை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.7 நாடுகளுக்கிடையிலான வலைப்பின்னல் (Inter Government Network)

டயலொக் நிறுவனத்தின் Broad band இணைய வசதியைப் பயன்படுத்தி இதனைக் குறைந்த செலவிலான கட்டமைப்பாக நிறுவ முடிந்தது. தொழில்நுட்ப நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், பொலிஸ் அவசர பதில் நடவடிக்கைப் பிரிவு, பாதுகாப்பு நிறைவேற்றுத் தலைமை அலுவலகம் மற்றும் 25 மாவட்ட முகாமைத்துவப் பிரிவுகளை உள்ளடக்கி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர கருமமாற்றும் கூடத்துடன் முழுமையாகத் தொடர்புபட்டுள்ளது. இந்த IGN வலைப்பின்னலுக்கான 03 குறுகிய இலக்கங்களைப் பயன்படுத்தி 42 தொலைபேசி மார்க்கங்கள் ஊடாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

டயலொக் Broad band சர்வதேச வலைப்பின்னலைப் பயன்படுத்தி அவசர அனர்த்தங்களின் போதான தொடர்பாடல் பணிகளைப் பலப்படுத்தி முன்னெடுப்பதற்காக நாடுகளுக்கிடையிலான தொடர்பாடல் கட்டமைப்பொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடுகளுக்கிடையில் குறைந்த செலவுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியும்.

7.8 சுனாமி நிலைமைகளின் போது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்பான ஒத்திகை

சுனாமி அனர்த்தம் பெரும்பாலும் ஏற்படக்கூடிய 14 மாவட்டங்களை உள்ளடக்கி (கொழும்பு, திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார், அம்பாந்தோட்டை, மாத்தளை, முல்லைத்தீவு, களுத்துறை, அம்பாறை, காலி, யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு) கரையோர மக்களின் முன் ஆயத்தம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் சுனாமி சந்தர்ப்பங்களில் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லல் தொடர்பாகத் தேசிய மட்டத்திலான ஒத்திகைகள் 2015 மார்ச் மாதம் 10ஆம் திகதி நடத்தப்பட்டன.

இந்த ஒத்திகையின் நோக்கம் முன் ஆயத்த நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்ளல், அனர்த்த முன்னெச்சரிக்கைக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையைப் பரிசோதித்தல்,

சுனாமி அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள மக்கள் மத்தியில் அது தொடர்பான புரிந்துணர்வு, அதேபோன்று இந்தச் செயற்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை இனங்காணுதல், இறுதி ஆயத்தம் வரை உரிய தகவல்கள் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொள்ளல், மக்களை மேட்டு நிலப் பகுதிகளுக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லல் என்பவற்றுக்காகத் தேசிய மட்டத்திலான ஒத்திகைகளை முன்னெடுப்பது முக்கியமாகும். ஆரம்பச் சந்தர்ப்பத்தில் 2010இல் மக்களைப் பாதுகாப்பான இடங்களக்கு வெளியேற்றுவதற்கு 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் எடுத்திருந்தபோதிலும் மாவட்ட அடிப்படையில் மக்களை 35 நிமிடங்களுக்குள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற முடிந்தது.





7.9 இலங்கை அனர்த்த வள வலைப்பின்னல்


இலங்கையின் அனர்த்த வள வலைப்பின்னலைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் நிகழ்காலத்தில் நிலவும் பல்வேறு உபகரணங்கள் மற்றும் மனித வளத்தை இனங்கண்டு அந்த உபகரணங்களையும் மனித வளங்களையும் அவசர சந்தர்ப்பங்களில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும். அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்குள் இருக்கும் வளங்கள் தொடர்பான தரவுகள் தயார்படுத்தப்பட்டுள்ளதுடன் வருடத்துக்கொருமுறை அவசர நிலைமைகள் கருமமாற்றும் பிரிவு இதனை இற்றைப்படுத்துகின்றது.

7.10 அழைப்பு நிலையம்

2013ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருக்கும் அனர்த்த முகாமைத்துவ அழைப்பு நிலையம் (அழைப்பு இல.117) அனர்த்த சந்தர்ப்பங்களின் போது மக்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக நிறுவப்பட்டது. தொலைபேசி அழைப்பாளர்கள் 21 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் தற்போது

அவசர நிலைமை பதில் நடவடிக்கை நிலையம் 24 மணித்தியாலங்களும் செயற்படும். இதுவரை அழைப்பு நிலையங்களுக்கு முறைப்பாட்டு அழைப்புக்கள், அவசர அழைப்புக்கள், தவறிப்போன அழைப்புக்கள், துண்டிக்கப்பட்ட அழைப்புக்கள் என்று 123,194க்கும் அதிகமான அழைப்புக்கள் கிடைத்துள்ளன.





7.11 டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

2015ஆம் ஆண்டினுள் 25 மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகளினால் மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையில் நாடு முழுவதிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துப் பிரதேசத்தின் சுகாதார அதிகாரிகள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முப்படையினர் மற்றும் பொலிசாரின் உதவியுடன் டெங்கு ஒழிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

7.12 இலங்கை இராணுவத்தினரால் அவசர நிலைமை நிவாரணக் குழுக்களுக்குத் தேடுதல் மற்றும் மீட்டல் தொடர்பாக ஐந்து நாள் ஆரம்பப் பாடநெறி

அனர்த்த முகாமைத்துவ நிலையம், கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு மற்றும் ஆட்களை மீட்பதற்கான பிரிவு மற்றும் உலக சுகாதார அமைப்பு என்பன இணைந்து 2015 செப்டம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 2015 நவம்பர் மாதம் 20ஆம் திகதி வரையிலான 05 நாட்களுக்குள் மீட்புத் தொடர்பான பயிற்சிப் பாடநெறி வெள்ளவத்தை, ரொக்சி கார்டனில் அமைந்துள்ள நகர தீயணைப்பு மற்றும் மீட்புப் பயிற்சிப் பாடசாலையில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இராணுவத்தின் தேடுதல், மீட்புக் குழுவின் 100 உறுப்பினர்களுடன் (உறுப்பினர்கள் 20 x நிகழ்ச்சித் திட்டங்கள் 05)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உறுப்பினர்கள் 5 x 5 = 25 பேர் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டதன் மூலம் பரஸ்பரம் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது.



தீயணைப்பு மற்றும் மீட்புப் பயிற்சிப் பாடசாலை - வெள்ளவத்தை

7.13 இலங்கையில் உள்ள நகரங்களுக்காக அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் நகரங்களை நிர்மாணிப்பதற்கான மூலோபாய முன்னறிவிப்பிற்கான சாத்தியத் தன்மையை மேம்படுத்தும் கருத்திட்டம் – 02வது கட்டம் *(UNHABITAT)*

இந்தக் கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் அவசர நிலைமை உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ் VHF பேஸ் ஸ்டேசன் 16, ரிப்பீட்டர் ஸ்டேசன் 02, கம்பூட்ஸ் 20, அறிவிப்பு ஒலிபெருக்கிகள் 04, கையினால் இயக்கும் 8 சைரன்கள், தேடுதல் மற்றும் மீட்பு தேடாக் கயிறுகள் (200 மீற்றர்) 04, கணினிகள் 02, கையடக்கத் தொடர்பாடல் உபகரணங்கள் 02 ஆகிய உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் 2015இல் நிறைவடைந்தது.

மனிதக் குடியிருப்புக்களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிதி அனுசரணையின் கீழ் அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் நகர அபிவிருத்தி மூலோபாயங்கள் தொடர்பான கருத்திட்டத்தின் கீழ் அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைமுறக்கு வந்து இவற்றின் மூலம் மக்களுக்குள்ள அவசர நிலைமைகளின்போது அதனை எதிர்கொள்ளும் ஆற்றல் மற்றும் முன்னெச்சரிக்கை வழிமுறையினை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

7.14 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட ஏனைய பணிகள்

பாடசாலை மாணவர்கள், பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பிட்ட தரப்பினர் உட்பட 25 குழுக்களுக்காக அவசர மீட்புப் பணிகள், முன்னெச்சரிக்கை, அனர்த்த முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பாக வீடியோ கருத்தரங்குக் கலையகம் மற்றும் அவசர நிலைமை கருமமாற்றும் நிலையத்தின் உதவியுடன் அறிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

7.15 சவால்கள்

- **தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள், பயிற்சியளித்தல்**

  அவசர நிலைமையின்போது அடிமட்ட உத்தியோகத்தர்களுக்குத் தகவல்களை வழங்குவதற்காக மேற்கூறியவாறு செயற்றின் மிக்க தொடர்பாடல் கட்டமைப்பொன்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு இருந்தது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் இருக்கும் தொடர்பாடல் கட்டமைப்பானது ஒட்டுமொத்தமாக அனர்த்தத்துக்குள்ளாகும் எல்லா மக்களையும் உள்வாங்கக் கூடியதானதல்ல. இந்த அனைத்துக் கட்டமைப்புக்களும் முன்னெச்சரிக்கை விடுக்கும் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டாலும் அதனைப் பராமரிப்பதில் பெரும் செலவினங்களையும் ஏற்க நோிட்டுள்ளது.

- **காலநிலை மாற்றங்களும் அவற்றின் பாதகமான விளைவுகளும்**

  அனர்த்தங்களைத் தடுப்பதற்கான திட்டங்கள் தயார் நிலையிலிருந்த போதிலும் அனர்த்தங்களை எங்களால் தடுக்க இயலாது. எனவே, காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் அவசர கால நிலைமைகளின் போதான பதில் கருமமாற்றும் நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்கு முன்னுரிமை வழங்கல் வேண்டும்.

  காலநிலை மாற்றங்களினால் கடந்த காலங்களில் வழமைக்கு மாறான வானிலைத் தன்மைகள் காணப்பட்டன. அதாவது குறுகிய காலத்துக்குள் கடும் மழை பெய்தபோது எதிர்வுகூறல்களை முன்வைக்க முடியாதளவுக்கு அனர்த்தங்கள்

ஏற்படுகின்றன. இந்தச் சீரற்ற கால நிலை காரணமாக வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், பயிர்ச்செய்கை, கால்நடைகள் என்பன சேதமடைந்தன. எனவே, முன்னெச்சரிக்கை மற்றும் காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லல் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8. நிதி முன்னேற்றம் – 2015 டிசம்பர் 31

2015 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்காக 939.81 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. இதில் 9.5 மில்லியன் ரூபாய் தேசிய சபையின் செலவுகளுக்காகவும், 168 மில்லியன் ரூபாய் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நடைமுறைச் செலவுகளுக்காகவும் 762.37 மில்லியன் ரூபாய் மூலதனச் செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இந்த மொத்தப் பணத்தில் 2015 டிசம்பர் 31ஆம் திகதியாகும்போது 865.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

செலவு விடய இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடுகள்	மொத்த ஒதுக்கம் 2015(தயாரிக்கப் பட்ட) (ரூ.மில்லியன்)	கிடைத்த ஒதுக்கம் 2015 (ரூ.மில்லியன்)	மொத்ச் செலவு 2015 (ரூ.மில்லியன்)
106-2-3-1-1503	அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை (NDMC)	**9.5**	**1.0**	**0.34**
106-2-3-2-1503	நடைமுறைச் செலவுகள் (DMC)	**168**	**168**	**167.5**
மூலதனச் செலவுகள்				
106-2-3-2401	பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி	**2.5**	**2.5**	**2.12**
106-2-3-5-2201 (I , II)	சிறிய நடுத்தர அளவிலான அனர்த்தங்களைக் குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	**500**	**499.42**	**327.54**
106-2-3-5-2201-(III)	அவசர நிலைமைகளின்போது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்	**50**	**21.77**	**21.43**
106-2-3-7-2201	திடீர் வெள்ளப் பெருக்கு நிலைமைகளை எதிர்கொள்வதற்காகத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	**75**	**50**	**47.06**
106-1-2-13-2502	திடீர் வெள்ளப் பெருக்கினை எதிர்கொள்ளும் திட்டங்களைத் தயாரிப்பதற்கு அரச நிறுவனங்களுக்கு உதவுதல்.*	**12**	**12**	**9.94**
106-2-4-26-2201	வெள்ளப் பெருக்குத் தடுப்பு களுத்தறை மாவட்டம், பானந்துறைப் பிரதேசம்.	**35**	**35**	**28**
106-2-4-26-2201	வெள்ளப் பெருக்குத் தடுப்பு தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவு	**42**	**42**	**5**
106-2-4-26-2201	வெள்ளப் பெருக்குத் தடுப்பு யாழ்ப்பாண மாவட்டம்	**23**	**23**	**23**
106-2-4-25-2201	அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	**15**	**15**	**8**
	மொத்த மூலதனச் செலவு – உள்நாட்டுப் பணம்	**754.5**	**700.69**	**472.09**
மூலதனச் செலவுகள் – வெளிநாட்டுப் பணம்				
106-1-2-13-2502	முன்னெச்சரிக்கை விடுப்புக் கட்டமைப்பைப் பலப்படுத்தல்- UNHABITAT (இரண்டாவது கட்டம்) **	**7.81**	**7.81**	**7.8**
	மொத்த மூலதன ஒதுக்கம் மற்றும் செலவு – உள்நாட்டு வெளிநாட்டு நிதி	**762.31**	**708.5**	**479.89**
	மொத்தச் செலவுகள் - (நடைமுறை மற்றும் மூலதனம்)	**939.81**	**877.5**	**647.73**

அட்டவணை **8.1:** நிதி முன்னேற்றம் 2015 டிசம்பர் 31

*அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நிதி ஒதுக்கங்களை வழங்குகின்றது.

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கங்களைப் பெற்று 106-01-02-13-2502-13 இன் கீழ் நிதி வழங்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

STATEMENT OF FINANCIAL PERFORMANCE FOR THE YEAR ENDED 31ST DECEMBER 2015

	குறிப்புகள்	2015 ரூபா. சதம்	2014 ரூபா. சதம்
வருமானம்	01	167,119,514.00	160,000,000.00
வேறு வருமானம்	02	195,351,155.31	246,391,847.19
		362,470,669.31	406,391,847.19
நிர்வாகச் செலவுகள்	03	(373,722,384.06)	(382,884,411.16)
வேறு செலவினங்கள்	04	(4,511,174.17)	(20,891,375.17)
மிகை/குறை செயலாற்றுகை மூலமானது		(15,762,888.92)	2,616,060.86
நிதிச் செலவினங்கள்		-	-
மிகை/ குறைவு வரி விதிப்பதற்கு முன்னர்		(15,762,888.92)	2,616,060.86
வரி விதிப்பு		-	-
வருடத்துக்கான மொத்த மிகை/ குறைவு		(15,762,888.92)	2,616,060.86

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் 1 – 16 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2015.12.31ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

	குறிப்புகள்	2015 ரூபா. சதம்	2014 ரூபா. சதம்
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
ஆதனங்கள், உபகரணங்கள், சொத்துக்கள்	05	1,285,538,301.94	1,460,770,656.98
நடைமுறைச் சொத்துக்கள்			
தொடரும் கருத்திட்டங்களுக்கான மூலதன வேலைகள்	06	203,166,796.22	77,262,863.25
அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணக் கையிருப்பு	07	33,706,203.05	13,193,408.48
பொருட் பதிவேடுகள்	08	2,574,007.56	2,887,945.41
செலுத்தல்களும் முற்பணங்களும்	09	2,906,314.37	9,269,335.23
வைப்புக்களும் ஏனைய கிடைப்பனவுகளும்	10	1,723,808.72	1,435,163.62
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	11	23,520,286.72	5,755,454.02
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**267,597,416.64**	**109,804,170.01**
மொத்தச் சொத்துக்கள்		**1,553,135,718.58**	**1,570,574,826.99**
நிதிகள், ஒதுக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள்			
தேறிய சொத்துக்கள்/ பங்குகள்		-	-
திரண்ட நிதியம்		(45,278,568.73)	(35,294,840.79)
ஒதுக்கங்கள்			
மூலதன வழங்கல் – பொதுத் திறைசேரி		833,185,769.81	901,357,691.45
சொத்துக்கள் மீதான மூலதன மானியம் – பொதுத் திறைசேரி		7,505,000.00	12,245,000.00
சொத்துக்கள் மீதான மூலதன மானியம் - ICET		1,244,186,078.53	1,423,794,229.73
மூலதன வழங்கல் மீதான முதலீடுகள்	12	(525,322,864.53)	(752,671,921.64)
மொத்தத் தேறிய சொத்துக்கள்/ பங்குகள்		**1,514,275,415.08**	**1,549,430,158.75**
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மானியம்	13	14,979,600.38	5,117,213.12
இளைப்பாறு பண உதவிகள் தொடர்பான பொறுப்புக்கள்	14	21,174,185.63	12,474,738.75
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தல்கள்	15	2,500,505.93	3,346,704.81
ஏனைய செயற்பாடுகள்	16	206,011.56	206,011.56
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**2,706,517.49**	**3,552,716.37**

மொத்தப் பொறுப்புக்கள்	**38,860,303.50**	**21,144,668.24**
மொத்த நிதிகளும் பொறுப்புக்களும்	**1,553,135,718.58**	**1,570,574,826.99**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் 1 தொடக்கம் 16 வரையிலான குறிப்புக்கள் நிதிக்கூற்றின் அவசியமான பகுதிகளாகும்.

நிறுவனத்தின் நிதிக்கூற்று 2015 டிசம்பர் 31ஆந் திகதியிலிருந்த நிலைமை தொடர்பாக மற்றும் வருட இறுதியில் மேலதிகம்/ பற்றாக்குறை தொடர்பாக உண்மையான மற்றும் நியாயமான பெளிப்படுத்துகையை வழங்குவதாக நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாகப் பணிப்பாளர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

நிசாந்த அபேசிங்க
உதவிப் பணிப்பாளர் (நிதி)
அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திகதி

மேஜர் ஜெனரர் L.B.R.மார்க் (இளைப்பாறிய)
பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திகதி

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2015 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான சொத்துக்கள்/ பங்குகளின் மாற்றங்கள் தொடர்பான கூற்று

	திறைசோியின் மூலதன மானியம்	திரண்ட நிதியம்	மொத்தச் சொத்துக்களின் அளவு
	ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
2014 ஜனவரி 01ஆம் திகதிக்கு மீதி	540,245,702.20	(41,740,875.81)	498,504,826.39
முன்னைய ஆண்டுக்கான செம்மையாக்கல்		3,829,974.16	3,829,974.16
2014ஆம் ஆண்டுக்காகக் கிடைத்த மூலதன மானியம்	744,435,986.97	-	744,435,986.97
2014ஆம் ஆண்டு மூலதன மானியம் மீதான முதலீடு	(769,194,631.17)	-	(769,194,631.17)
மிகை/ பற்றாக்குறை (2014ஆம் ஆண்டுக்கானது)		2,616,060.86	2,616,060.86
2014 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மீதி	515,487,058.00	(35,294,840.79)	480,192,217.21
2015 ஜனவரி 01ஆம் திகதிக்கான மீதி	515,487,058.00	(35,294,840.79)	480,192,217.21
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்	-	5,779,160.93	5,779,160.93
2015ஆம் ஆண்டு கிடைத்த மூலதன மானியம்	684,500,000.00	-	684,500,000.00
2015ஆம் ஆண்டு மூலதன மானியம் மீதான முதலீடு	(525,322,864.53)	-	(525,322,864.53)

மிகை/ பற்றாக்குறை 2015ஆம் ஆண்டுக்கானது	-	(15,762,888.92)	(15,762,888.92)
2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மீதி	674,664,193.47	(45,278,568.78)	629,385,624.69

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம் 1 – 16 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

2015 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூற்று

	2015	2014
	ரூபா. சதம்	ரூபா. சதம்
மிகை/ பற்றாக்குறை, வரிக்கு முன்னர்	(15,762,888.92)	2,616,060.86
சீராக்கல்		
பெறுமானத் தேய்வு	187,020,281.57	231,275,411.42
மூலதன மானிய சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு	(181,500,222.57)	(223,930,259.48)
பணிக் கொடைக் கொடுப்பனவு		(124,351.25)
ஊழியர் சேமலாப நிதி மீதான மேலதிகச் செலுத்தல்		(209,918.47)
மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு சீராக்கல்	2,847,928.63	-
ஓய்வூதிய நிதிப் பயன்பாடுகளுக்கான ஏற்பாடு	8,699,446.88	3,530,994.37
செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் மிகை/ பற்றாக்குறை	1,304,545.59	13,157,937.45
செயற்படு மூலதன மாற்றம்		
கிடைக்கவேண்டிய மிகை/ பற்றாக்குறை	(288,645.10)	-
பொருட் பதிவேடுகளில் மிகை/ பற்றாக்குறை	313,937.90	(510,015.25)
மொத்தமாக இருக்கும் அனர்த்தப் பதிவு நடவடிக்கை உபகரணங்களின் மிகை/ பற்றாக்குறை	(20,512,794.57)	2,316,642.08
முன்னைய செலுத்தல்கள் மற்றும் முற்பண மிகை/ பற்றாக்குறை	6,363,020.86	(5,341,732.33)
வேறு செலுத்தவேண்டியவற்றின் மிகை/ குறைவு	(846,198.88)	(6,495,871.68)
வேறு ஒதுக்கங்களின் மிகை/ குறைவு	-	(2,670,787.50)
மூலதன WIP கருத்திட்டங்களின் மிகை/ பற்றாக்குறை	(125,903,932.97)	11,908,826.67)
கருமமாற்றல் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	(139,570,067.17)	12,364,999.44
முதலீட்டுச் செயற்பாடுகளின் நிதிப் பாய்ச்சல்		
சொத்துக்கள், உபகரணங்கள் என்பவற்றைக் கையேற்றல்	(11,787,926.53)	(1,023,373.57)
வட்டி வருமானம்	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	(11,787,926.53)	(1,023,373.57)
நிதிச் செயற்பாடுகளின் நிதிப் பாய்ச்சல்		
மூலதன மானியங்களின் மொத்த அதிகரிப்பு (கிடைப்பனவு)	684,500,000.00	744,435,986.97
மூலதன மானியங்களின் மொத்த அதிகரிப்பு (செலுத்தல்)	(525,322,864.53)	(769,194,631.17)
அரச சார்பற்ற, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மொத்த உதவிகள்	9,945,691.37	3,479,354.33
நிதிச் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	169,122,826.84	(21,279,289.87

நிதி மற்றும் நிதி சமப்படுத்தல்களின் போதான மொத்த வித்தியாசம்	17,764,832.70	(9,936,664.00)
வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பண சமப்படுத்தல்கள்	5,755,454.02	15,692,118.02
வருட இறுதியில் பணம் மற்றும் பண சமப்படுத்தல்கள் (குறிப்பு A)	23,520,286.72	5,755,454.02

குறிப்பு A – நிதி மற்றும் நிதிச் சமன்பாடுகள்	**ரூபா. சதம்**	**ரூபா. சதம்**
வங்கியிலுள்ள காசு	23,464,131.47	5,714,298.77
கையிலுள்ள காசு	56,155.25	41,155.25
	23,520,286.72	5,755,454.02

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம் 1 – 16 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

கணக்கீட்டுக் கொள்கைகள்

1. தாபனத் தகவல்கள்

1.1 அமைவிடமும் சட்டத்தன்மையும்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பது இலங்கையில் அனர்த்த ஆபத்தினை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளின் போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய சபைக்கு உதவுவதற்காக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒரு சட்டரீதியான நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அமைச்சின் பெயர் மக்கள் அமைதி, அனர்த்த முகாமைத்துவ, கிறிஸ்தவ மத விவகார அமைச்சு என்று 2015இல் அழைக்கப்பட்டது.

1.2 கூட்டிணைக்கப்பட்ட நாடு

2005ஆம் ஆண்டின் 13வது இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூட்டிணைக்கப்பட்டது.

1.3 கருமம் மற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும் முக்கிய இடங்கள்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் வித்யா மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதேபோன்று அனைத்துக் கச்சேரிகள் தோறும் 25 மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1.4 முக்கிய செயற்பாடுகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் இயற்கையான தொழில்நுட்ப, மற்றும் மனிதர்களின் செயற்பாடுகளினால் ஏற்படும் அனர்த்தங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் தேசத்திலும் சமுதாயத்திலும் ஒரு பாதுகாப்பான கலாசாரமொன்றை உருவாக்குவதுடன் அதனைத் தொடர்ந்து பேணுதல். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் சமூகம் பாதுகாப்பாகவும் தயாராகவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

2. கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 ஒவ்வும் தன்மையைக் காட்டும் கூற்று

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதிக் கூற்றுக்களுக்குப் பூரணமான வருமானக் கூற்று நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று நிதியங்கள் மாறுபடல் தொடர்பான கூற்று, மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் இருப்பதுடன் இலங்கை அரச துறையின் கணக்கீட்டுக் கொள்கைக்கு ஏற்புடையும்வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.1.2 தயாரிக்கும் அடிப்படை

இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ள இக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான கிரய சம்பிரதாயத்துக்கமையத் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பணவீக்க நிலைமைகள் தொடர்பாகச் செம்மையாக்கலகள் மேற்கொள்ளப்படவில்லை. தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்ட விசேட கொள்கைகளுக்குப் பின்னால் வரும் குறிப்புக்களில் அது விபரிக்கப்பட்டுள்ளது.

2.1.3 ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள்

இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிரந்தரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.1.4 நிதி ஆண்டு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கலண்டர் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

2.2 சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானங்களை குறைத்த மதிப்பீடுகளுக்கமையக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேய்மான ஒதுக்கங்கள் பின்வருமாறு சமனான தவணைப் பணங்கள் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டவற்றைப் பதிவழிப்பதற்கான சொந்தக் காணிகளுக்கு மேலதிகமாகச் சகல காணிகள், உபகரணங்கள் என்பவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

	வீதம் (%)
கட்டிடங்கள்	2.5
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	5
அலுவலக உபகரணங்கள்	10
தளபாடங்கள், உபகரணங்கள்	10
கணினிகள், உதிரிப்பாகங்கள்	10
மோட்டார் வாகனங்கள்	20
தொலைத்தொடர்பு சாதனங்கள்	5-20
கணக்கீட்டு மென்பொருட்கள்	20

2013க்கு முன்னர் பெறுமானத் தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட/ நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தும் வருடத்துக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்மாணிக்கப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட வருடத்துக்குள் பெறுமானத் தேய்வு கழிக்கப்படாமையினால் அந்தச் சொத்துக்களைப் பதிவழிக்கும் வருடத்தில் அது முழுமையாகப் பெறுமானத் தேய்வுக்கு உள்ளாகுவதனால் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தனது முறையை மாற்றியுள்ளது.

2.3 ஓய்வூதியப் பணிக்கொடைகளைச் செலுத்துவதற்கான நிதி ஒதுக்கம்

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பணியாற்றிய ஒவ்வொரு வருடத்துக்குமாகக் கலண்டர் வருடத்தின் இறுதி மாதத்துக்கான சம்பளத்தில் அரைவாசி கணக்கிடப்பட்டுக் கணக்காளர் ஊடாக ஓய்வூதியப் பணிக்கொடைச் செலுத்தல்களுக்காக நிதி ஒதுக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் பிற்போடப்பட்ட பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கங்களில் புறம்பாக நிதி மயமாக்கல் அல்லது ஆயுள்காலத்தைக் கணக்கிடுதல் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 வேறு கிடைக்கவேண்டியவை

வர்த்தக ரீதியில் கிடைக்கவேண்டியவை எதிர்பார்க்கப்பட்ட, நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளன. வருட இறுதியில் கிடைக்கவேண்டிய அனைத்தும் மீளாய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் கிடைக்காதென கருதப்படுபவற்றின் மதிப்பீடொன்று

தயாரிக்கப்படும். அறவிடமுடியாக் கடன்கள் அவை இனங்காணப்பட்ட வருடத்துக்குள் பதிவழிக்கப்படும்.

2.5 நிதி மற்றும் நிதிச் சமன்பாடுகள்

நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களுக்கான நிதி மற்றும் நிதிச் சமன்பாடுகளுக்குக் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு, வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பன உள்ளடங்கியுள்ளன. ஐந்தொகையில் வங்கி மேலதிகப் பற்றுக்கள் நடைமுறைப் பொறுப்புக்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களும் உள்ளடங்குகின்றன.

2.6 அறிக்கையிடப்படும் காலவரையறையின் பின்னரான சம்பவங்கள்

நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றின் பின்னர் இடம்பெறும் சகல பௌதிக சம்பவங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதுடன் தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செம்மையாக்கல்கள் செய்யப்படும்.

2.7 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும்போது அறிந்திருந்த அனைத்துப் பொறுப்புக்களும் உள்ளடக்கப்படும்.

2.8 நிச்சயமான பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கும் பங்களிப்பு வழங்கத் தகமை பெறுகின்றனர். ஊழியர்களினால் ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு முறையே 12% மற்றும் 3% பங்களிப்பினை வழங்குகின்றனர்.

2.9 வருமானம்

2.9.1 நிகழ்கால மானியம் வழங்கலின் தன்மை

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்கள் 20, 29, 30 மற்றும் 31ஆம் பிரிவுகளின்படி அரச மானியங்கள் மற்றும் உதவிகளை வெளிப்படுத்தல் நடைமுறைச் செலவுகளுக்காக நிறுவனத்துக்குத் திறைசோியிடமிருந்து கிடைக்கும் உதவிகள் வருமானங்களாகக் கணக்கிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்படும் அனைத்து வருமானங்களும் நேரடியாக ஏனைய வருமானங்களின் கீழ் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.9.2 மூலதனத் தன்மையிலான வருமானம்

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்கள் 20, 29, 30 மற்றும் 31ஆம் பிரிவுகளின்படி அரச மானியங்கள் மற்றும் உதவிகளை வெளிப்படுத்தல் மூலதனச் செலவுகளுக்காக நிறுவனத்துக்குத் திறைசோியிடமிருந்து கிடைக்கும் உதவிகள் வருமானங்களாகக் கணக்கிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்படும் அனைத்து வருமானங்களும் நேரடியாக ஏனைய வருமானங்களின் கீழ் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.1.0 செலவுகளை ஏற்றல்

வருடத்துக்கான செலவுகளுக்கமைய வருமானங்களைக் கணக்கிடும்பொது நிருவாகத்தைப் பேணுவதற்குத் தேவைப்படும் நடைமுறை ரீதியிலான அனைத்துச் செலவுகளும் வருமானத்தில் சேர்க்கப்படும்.

2.1.1 பொருட்பதிவேடுகளைத் தயாரித்தல்.

பொருட்பதிவேடுகள் உண்மைப் பெறுமதிக்கமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் முதலில் வந்து முதலில் செல்லும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. பொருட்பதிவேடுகளின் இறுதி மீதி கொள்வனவு செய்யப்பட்ட இறுதிப் பெறுமதிக்கமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2015 நிதிக் கூற்றுக்கமையக் குறிப்புக்கள்	2015	2014
	ரூபா. சதம்	ரூபா. சதம்
குறிப்பு 01 - வருமானம்		
நடைமுறைச் செலவுகளுக்கான மானியம்	167,119,514.00	160,000,000.00
	167,119,514.00	160,000,000.00

பொதுத் திறைசோியிடமிருந்து கிடைக்கும் நடைமுறைச் செலவுகளுக்கான மானியங்கள் மற்றும் இலங்கைக் கணக்கீட்டுத் தரம் இல.20, அரச உதவிகள் மற்றும் அரசின் உதவிகளை வெளிப்படுத்துவதற்கான கணக்கீட்டுக்கமை ஏற்றுக்கொள்ளப்படும். அந்தத் தரங்களுக்கமைய அரசின் உதவிகள் அந்த உதவிகள் கிடைப்பது தொடர்பான போதுமான உறுதிப்படுத்தல் கிடைக்கும் வரை அதனை ஏற்றுக்கொள்ளலாகாது. இதனால் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அடைந்த நடைமுறைச் செலவுகளை மாத்திரம் 2015 – டிசம்பர் 31ஆம் திகதிக்குத் தமது வருமானமாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால். வருமானத்துக்கமையச் செலவுகள் ஏற்பட்ட அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

குறிப்பு 02 - வேறு வருமானம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
ஒக்ஸ்பாம் உதவி	-	-
யு.என்.டி.பி. உதவி	271,382.00	190,611.00
வேல்ட் விசன் உதவி	-	-
ஏ.டி.பி.சி. உதவி	-	1,301,908.00
ஏ.டி.ஆர்.சி. உதவி	-	-
ஏசியன் பவுண்டேசன் உதவி	-	-
யு.என்.டி.பி. இன் பாதுகாப்புத் தினத்துக்கான உதவி	990,000.00	-
சார்க் (எஸ்.டி.எம்.சி) உதவி	-	-
சி.எஸ்.சி. உதவி	-	-
செஞ்சிலுவைச் சங்க உதவி	-	299,092.77
சேவ் த சில்ரன் உதவி	-	-
தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம்	-	12,500,000.00

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள்/ A/C	-	-
கேள்விக்கான வைப்புக்கள் – மீளச் செலுத்தப்படாதது	85,500.00	104,000.00
குறிப்பிட்ட பாடசாலைத் தலைவர்கள்	-	-
சுனாமி அப்புறப்படுத்துலுக்காகப் பாதுகாப்பு அமைச்சு	-	-
கெயார் இன்னநஷனல் ஸ்ரீலங்கா	-	-
நானாவித வருமானம்	145,106.12	24,290.37
மூலதன வழங்கல் தேய்மானம்	181,500,222.57	223,930,259.48
தேசத்துக்கு மகுடம் அ.மு. அமைச்சு உதவி	-	3,820,535.39
யு.என். ஸ்பைடர் உதவி	-	-
சமிக்கை விளக்குகளுக்கான உதவி	-	-
உலக சுகாதார அமைப்பின் உதவி	627,585.00	105,000.00
எஸ்.ஏ.டி.கே.என். உதவி	-	-
செய்மதி இணைப்பிற்கான கட்டண உதவி அ.மு.அ.	-	-
யு.என்.ஹபிடட் உதவி	7,704,531.09	-
டயலொக் உதவி	-	339,300.00
பாதுகாப்புத் தினத்துக்கான சி.எச்.ஏ. உதவி	-	171,126.56
என்.ஈ.ஓ.பி. இற்காக யு.என்.டி.பி. உதவி	-	581,000.00
ஏ.டி.பி.சி. பாதுகாப்புத்தின உதவி	-	1,034,215.00
செயலமர்வுக்கான சார்க் உதவி	-	40,000.00
தே.அ.மு.நி. உதவி	1,000,000.00	-
காப்புறுதி உரிமைகோரல்	27,550.00	140,787.52
சார்க் தேவைகள் மதிப்பீட்டுத்திட்ட உதவி	151,349.90	1,809,721.10
	195,351,155.31	246,391,847.19

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் - 2015

குறிப்பு 02 - வேறு வருமானம்

உப குறிப்பு - 02:01 சொத்து மூலதனம் மானியப் பெறுமானத் தேய்வு

மானியமாக வழங்கப்பட்ட சொத்துக்கள்	2015.01.01ஆம் திகதிக்கு மொத்தச் செலவினம்	வருடத்தில் சேர்க்கப்பட்டவை/ முதலீடு	முன்னைய வருட சீராக்கல்	2015.12.31ஆம் திகதிக்கு மொத்தச் செலவினம்
	ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்	ரூபா. சதம்
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	426,286,941.28			426,286,941.28
அலுவலக உபகரணங்கள்	5,916,010.90			5,916,010.90
தளபாடங்களும் உபகரணங்களும்	558,600.00			558,600.00
மோட்டார் வாகனங்கள்	259,413,229.98			259,413,229.98
தொடர்பாடல் உபகரணங்கள்	1,547,757,171.74			1,547,757,171.74
கணினிகள், உதிரிப்பாகங்கள்	66,762,750.01			66,762,750.01
மோட்டார் வாகனங்கள் – திறைசேரி	23,700,000.00			23,700,000.00
	2,330,394,703.91	-	-	2,330,394,703.91

தேய்மானம்	2015.01.01ஆம் திகதிக்கு திரண்ட மீதி	வருடத்துக்கான தேய்மானம்	முன்னைய வருடச் சீராக்கல்	2015.12.31ஆம் திகதிக்கு திரண்ட மீதி
மோட்டார் வாகனம், திறைசேரி வேறு	11,455,000.00	4,740,000.00	-	16,195,000.00
மோட்டார் வாகனங்கள் ICET	248,242,421.44	8,061,845.65	2,847,928.63	259,152,195.79
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் ICET	90,584,996.58	21,314,347.06	-	111,899,343.64

கணினிகள், உதிரிப்பாகங்கள் ICET	33,381,375.55	6,676,275.00	-	40,057,650.55
அலுவலக உபகரணங்கள் ICET	4,998,710.90	183,460.00	-	5,182,170.90
தொடர்பாடல் உபகரணங்கள் ICET	505,373,669.71	140,468,434.86	-	645,842,104.57
தளபாடங்களும் உபகரணங்களும் ICET	279,300.00	55,860.00	-	335,160.00
	894,355,474.18	181,500,222.57	2,847,928.63	1,078,663,625.48

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சொத்துக்கள், மூலதன உதவிகள் பெறுமானத் தேய்வுக்கான கணக்கீட்டுத் தரங்கள் 2014ஆம் ஆண்டு இலங்கை நியமம் 20 – அரசின் உதவிகள் மற்றும் அரசின் உதவிகளை வெளிப்படுத்தும் வகையிலான கணக்கீட்டின்படி மாற்றப்பட்டது. மேல் கொள்கை ரீதியிலான மாற்றங்களுக்காகக் கணக்கீட்டுத் தீர்வகள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரம் 8 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகள் எனக் குறிப்பிடப்பட்டுக் கிடந்தவை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளீடுகள் மூலம் 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2015

குறிப்பு 03 - நிர்வாகச் செலவுகள்	2015 ரூபா. சதம்	2014 ரூபா. சதம்
Depreciation		
அலுவலக உபகரணங்கள்	1,942,488.05	1,863,013.15
கணக்கீட்டு மென்பொருட்கள்	107,500.00	100,000.00
கட்டிடங்கள் மற்றும் மாதிரிகள்	-	-
வாகனங்கள்	13,436,202.25	55,478,873.40
தளபாடங்களும் உபகரணங்களும்	640,294.25	628,023.29
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	21,366,091.07	21,366,091.07
தொடர்பாடல் உபகரணங்கள்	140,709,514.86	143,077,671.42
காணி	-	-
கணனிகள்	8,818,191.09	8,761,739.09
பராமரிப்புச் செலவுகள்		
கட்டிடங்கள் பராமரிப்பு	-	566,422.80
வாகனங்கள் பராமரிப்பு	11,364,219.73	8,570,810.30
இயந்திர உபகரணங்கள், ஏனைய உபகரணங்கள் பராமரிப்பு	10,216,494.63	6,869,949.74
ஆட்களுக்கான பணிக்கொடை		
ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு(12%)	11,705,037.08	8,863,530.78
வேறு கொடுப்பனவுகள்	51,951,060.00	29,300,243.22
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிப் பங்களிப்பு(3%)	2,876,463.18	2,166,251.95
சம்பளங்கள், சம்பளச் செலவுகளுக்கான கணக்குகள்	44,706,750.18	43,002,704.63
சாரதிகளுக்கான சீருடைக் கொடுப்பனவுகள்	136,000.00	-
மேலதிக நேரக் கொடுப்பனவுகள்	4,319,858.54	4,107,445.04
நடைமுறைச் செலவுகள்		
செலுத்தவேண்டிய ஊ.ந.பொ.நிதி, ஊ.சே.நிதி ஒதுக்கம்	-	-
செலுத்தவேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	8,936,348.13	3,530,994.37
வரிகள்	-	-
சேவைகள்		
தபால், தொலைத்தொடர்பு	8,263,874.48	8,033,626.85
மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட தேவையான அளவுகளை விஞ்சி மீட்புப் பைகள், கூடாரங்கள் மற்றும் தேடும் உபகரணம் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 4.30 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 75 மில்லியன் தொகை 10 மூலதன உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இற்கு முன்னர் அக் கொள்வனவுகளை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 வரையிலும் அத்தகைய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிலையத்தின் கொள்வனவுத் திட்டம் ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

	பரப்பு	அவதானிப்புக்கள்
(அ)	களஞ்சிய முகாமைத்துவம்	பௌதீகரீதியாக களஞ்சியத்தால் பெறப்பட்டிராத ரூபா 20.36 மில்லியன் பெறுமதியான இருப்பு உருப்படிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ)	கணக்கீடு	கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை திருத்துவதற்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது.
(இ)	முற்பணங்களைத் தீர்த்தல்	நிலையத்தின் பதவியணியினரைப் போன்று வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்ட முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நீண்ட காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக இருந்தன.
(ஈ)	மனித வளங்கள் முகாமைத்துவம்	நிலையம் விசேட அறிவுத் திறன்களையுடைய பதவியணியினரின் பற்றாக்குறைகளுடன் செயற்படுகின்றது. ஆகையால், அனர்த்த முகாமைத்துவம் மீதான நிலையத்தின் எதிர்கால மனிதவள சவால்களை எதிர்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் நிலையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
306/72,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2015 டிசெம்பர் 31ஆந் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவுக்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்படி சம்பந்தமான உங்களின் சம இலக்கத்தை உடைய டிஎம்ஜி/ஏ/டிஏஎம்சி/1/15/12ஆம் இலக்க 2015 ஜூன் மாதம் 15ஆந் திகதிய கடிதம் சம்பந்தமான விளக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2. நிதிக்கூற்றுக்கள் பற்றி கருத்துரைத்தல்

2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07

இணங்குகின்றேன்.

குறித்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2016ஆம் ஆண்டில் அதற்கான பெறுமானங்களை கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2.2. கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) இணங்குகின்றேன்

நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டின் மீதிகளை திருத்தியமைத்து சமர்ப்பிக்க வேண்டும் என்பது தொடர்பாக இணங்குவதுடன் ரூபா 4,821,600 பெறுமதிமிக்க உபகரணங்கள் பராமரிப்புச் செலவினமாக பதிவளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்படி உபகரணங்களை கொள்வனவு செய்வது 2013ஆம் ஆண்டின் மூலதன கொடை பெறுகைகளில் இருந்து முதலீடுகளாக குறிப்பு இலக்கம் 12இன் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஆ) இணங்க முடியாது

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதிக்கு பூர்த்தி செய்யப்படாதிருந்த கருத்திட்டங்கள் தொடர்பாக அனர்த்தங்களைக் குறைக்கும் பிரிவினால் நிதிப்பிரிவுக்கு வழங்கப்பட்ட சகல விபரங்களும் குறிப்பு இலக்கம் 06இன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகளாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) 2016ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திடமிருந்து கிடைத்துள்ள 12 மோட்டார் சைக்கிள்கள் நிலையத்திடம் பொறுப்பளிப்பது முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதற்கமைய மேற்படி மோட்டார் சைக்கிள்களை நிலையத்தின் பெயருக்கு பொறுப்பேற்றுக்கொள்வது இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை. இந்த வாகனங்களை பொறுப்பளிப்பது சம்பந்தமாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் எம்ரிஏ 06 மற்றும் எம்ரிஏ 08 ஆகிய படிவங்கள் நிலையத்திற்கு கிடைத்துள்ள போதிலும் 04 மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தமான படிவங்களும் பதிவுச்சான்றிதழ்களும் இந்த நிலையத்தில் இல்லை என்பது தெரியவந்துள்ளது. பொறுப்பளிப்பது சம்பந்தமான ஆவணங்களை சாட்டுதல் செய்பவரினால் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்ப வேண்டிய பிரதி மற்றும் சாட்டுதல் செய்பவர் தம்வசம் வைத்திருக்க வேண்டிய படிவம் தவிர ஏனைய படிவங்கள் 08 மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தமாக காணப்படுவதாக நிதிப்பிரிவிடமிருந்து அறியக்கிடைத்துள்ளதுடன் மேற்படி படிவங்கள் திகதியிடப்படாது கையொப்பமிடப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த மோட்டார் சைக்கிள்களை சாட்டுதல் செய்வது சம்பந்தமான ஆவணங்கள் கையொப்பமிடப்பட்டு தற்போது சுமார் ஆறு வருடங்கள் கடந்துள்ளன.

மோட்டார் வாகனம் ஒன்றை சாட்டுதல் செய்வது சம்பந்தமான ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்டு 14 நாட்களுக்குள் அவற்றை சாட்டுதல் செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயினும் அவ்வாறு 14 நாட்கள் கடந்துள்ள பின்னர் ஒரு நாளுக்காக ரூபா 100 ஆன தண்டப்பணம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியது பொதுச்சட்டமாகும். இதற்கமைய மேற்படி மோட்டார் வாகனங்களை இப்பொழுது சாட்டுதல் செய்யும் பட்சத்தில் ஒரு மோட்டார் சைக்கிளுக்கு சுமார் ரூபா 200,000 மிகை தண்டப்பணமாக நிலையம் செலுத்த வேண்டி ஏற்படும். இந்த மோட்டார் சைக்களிகளில் பெரும்பாலானவை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் அதனால் அவற்றை உபயோகத்தில் இருந்து நீக்கி மாவட்ட அலுவலகங்களில் வைக்கப்பட்டிருக்கப்பதாகவும் இதுபற்றி தேடிப்பார்த்தபோது அறியமுடிந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் மேற்படி மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக அனர்த்த

முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவிடம் விளக்கங்களை அறிக்கையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஈ) இணங்குகின்றேன்

குறித்த சீராக்கல்கள் 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(உ) இணங்குகின்றேன்

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட சகல சொத்துக்களும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு உரித்தானதாக உள்ளதனால் அது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் வினவி சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஊ) இணங்குகின்றேன்

குறிப்பு சம்பந்தமான தகவல்கள் சரியாக இல்லலையாயினும் ஐந்தொகையில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(எ) இணங்க முடியாது

நிலையத்தின் சொத்துக்களுக்கான தேய்மானத்தை கணிப்பிடும் கொள்கைக்கு அமைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட / சுவீகரிக்கப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் கணிப்பிடப்படுவதில்லை. அதற்கமைய கணக்குகள் கூற்றில் குறிப்பு இலக்கம் 05இன் மூலம் சரியான தேய்மானம் கணிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஏ) இணங்குகின்றேன்

நின்ற அடிப்படையில் கணக்குகளை பதிவுசெய்வதற்கு ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய செலவினங்களை முடிந்தளவுக்கு கணக்கீட்டு கட்டமைப்பினுள் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறானதொரு நிறுவனத்தில் மாவட்ட மட்டத்திலான கொடுக்கல் வாங்கல்களை பூரணமாக நின்ற அடிப்படையில் உள்வாங்கிக் கொள்வதை மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்வது கடினமான விடயமாகும். எனவே ஆண்டின் இறுதியில் சுமார் 15 நாட்களுக்கு ஏற்புடையதான எரிபொருள் செலவினம், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செலவினம் மற்றும் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கான செலவினம் இந்தப் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் மேற்படி சகல செலவினங்களும் ஆண்டு நிறைவடைந்து ஒருசில தினங்களுக்குள் முற்றாக செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன.

(ஐ) இணங்குகின்றேன்

2013ஆம் ஆண்டில் கடனளிப்பை கணக்கிடும்போது ஏற்பட்ட தவறு காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் 2016ஆம் அண்டில் இதனை சீராக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஒ) அனர்த்த முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணியை நிலையத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் வரைவுசெய்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஓ) இணங்குகின்றேன்

2015 நிதி ஆண்டில் வழங்கல் நடவடிக்கைகளை நிறைவுசெய்து கொள்வனவுகளுக்கான கட்டளைகள் அனுப்பப்பட்டிருந்த குறித்த பொருட்கள் மற்றும் உபகரணங்களை பரிசீலித்து உரிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2016ஆம் அண்டில் ஏற்பட்ட அவசர வெள்ள அனர்த்தத்திற்கு முகங்கொடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் அவை கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லையாயின் அவ்வாறு பயன்படுத்தியிருக்க முடியாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஔ) இணங்குகின்றேன்

இந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களில் பயன்படுத்தப்பட்டவைகளும் உள்ளடங்குவதுடன் அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவுசெய்யப்படல் வேண்டும். ஏனைய பொருட்களின் பெறுமதிகளை கணக்குகளில் பதிவுசெய்வதற்கான செலவினத்தை பெற்றுக்கொள்ள முடியாது போனதால் கணக்குகளில் பதிவுசெய்ய முடியவில்லை. எனினும் மேற்படி பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் 2016ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் பதிவுசெய்யப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(க) இணங்க முடியாது

ஐந்தொகையின் குறிப்பு இலக்கம் 13இன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா 14,979,600 ஆன பெறுமதி சரியானதாகும் என்பதுடன் நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்குகளில் இருந்து அதனை தெளிவாக உறுதிசெய்துகொள்ள முடியும். மேலும் வேறு அமைப்புக்களில் இருந்து ஆண்டுக்குள் கிடைத்தவற்றில் குறித்த ஆண்டில் செலவிடப்பட்டுள்ள தொகை குறிப்பு இலக்கம் 04இன் மூலம் வேறு செலவினங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் தயவுடன் அறியத்தர விரும்புகின்றேன்.

2.2.3. கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

(அ) 2015ஆம் ஆண்டில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டிருப்பது 2015 ஆம் ஆண்டு மே மாதமாகும் என்பதனால் முதல் ஆறு மாதங்களில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அவ்வாறே அமுல்படுத்த முடியவில்லை. எனினும் 2016ஆம் ஆண்டு எஞ்சியிருந்த பணத்திலிருந்து கொழும்பு, இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 100 நாள் தேசிய நிகழ்ச்சித்திடடத்தின் கீழ் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதற்கமைய இவற்றின் முன்னேற்றம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவக் குழுவிடம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஆ) அவசர நடவடிக்கை நிலையத்தின் பணிகளாக, ஏற்படுகின்ற அவசர அனர்த்தங்களுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற சகல அனர்த்த அவசர அனர்த்தங்கள் சம்பந்தமாகவும் அவசர நடவடிக்கை நிலையத்தின் மூலம் ஒருங்பகிணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வனைத்து விடயங்களும் அவசர நடவடிக்கை நிலையத்தின் ஊடாக வெளியிடப்படுகின்ற நாளாந்த நிலைமை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 2015ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் அவசர நடவடிக்கை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(இ) இணங்குவதில்லை

பொது 35 மாதிரிப் படிவத்தின் மூலம் ரூபா 168,000 ஆன தொகைக்குரிய காசோலை இலக்கம் 006106-09/2015 OSAKA IT நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. நிதி செலுத்தப்பட்டதை உறுதிசெய்யத் தேவையான சகல ஆவணங்களும் கோப்புகளில் உள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2.4. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

(i) நிதிப்பிரமாணம் 104 நிதிப்பிரமாணம் 110

வாகன விபத்துக்கள் சம்பந்தமான அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ii) நிதிப்பிரமாணம் 371(5)

இணங்குகின்றேன்.

இந்த முற்பணத்தொகை ஆண்டு நிறைவடைந்து ஒரு மாதங்களுக்குள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் மேற்படி முற்பணத்தை தீர்த்துவைப்பது தாமதமடையக் காரணம் திறைசேரியினால் நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மாவட்டங்களுக்கு முற்பணத் தொகைகள் தாமதமாக வழங்கப்பட்டமையாகும். எதிர்காலத்தில் முற்பணத் தொகைகளை உரிய காலப்பகுதிக்குள் தீர்த்து வைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தர விரும்புகின்றேன்.

(iii) நிதிப்பிரமாணம் 757(1)(அ) மற்றும் (ஆ)

இணங்குகின்றேன்

பொருட் பதிவேட்டுப் புத்தகம் சமப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பொருட் கணிப்பீட்டுச் சபையினால் நிலுவைகைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு சரியானவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மேலும் எதிர்காலத்தில் களஞ்சியத்திற்கு பொறுப்பான அலுவலரின் ஊடாக உறுதிப்படுத்தி அவரின் கையொப்பத்தை பதிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.5. இணக்கம் செய்யாத கணக்குகள்

(அ) இணங்க முடியாது

2.5(அ)இன் கீழ் i.ii.iii மற்றும் iv என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக் கணக்குகள் இறுதிக்கணக்குகளுக்கு அமைய நிலுவைப் பேரேட்டுக்கு ஏற்ப மீதிகள் இணங்குகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

கணக்கீட்டு பேரேடு கணினிமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பாகும் என்பதுடன் இறுதிக்கணக்குகள் அதற்கமைய தயார்செய்யப்பட்டுள்ளன. கணக்காய்வுக்குத் தேவையான சகல நிதித் தகவல்களும் இந்த கட்டமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தயவுடன் அறியத்தருவதுடன் கணக்கீட்டு எழுதுநர்கள் அவர்களின் வசதி கருதி எழுத்து மூலமான ஆவணங்களையும் பேணிவருகின்றார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் முற்பணங்கள் சம்பந்தமாக இந்த எழுத்து மூலமான ஆவணங்களின் அடிப்படையில் பேணி வரப்படுவதுடன் மேற்படி ஆவணங்கள் எதிர்காலத்தில் உபயோகத்தில் இருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இணங்குகின்றேன்

முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்கள் சம்பந்தமான செலவின அறிக்கைகளை கொண்டுவந்து 2016ஆம் ஆண்டில் உரியவாறு தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(இ) இணங்குவதில்லை

ரூபா 560,809 ஆன தொகையில் ரூபா 256,568.87 ஆன தொகைக்கு விமலராஜாவிடம் அறவிடப்பட வேண்டியுள்ளது. கிடைக்க வேண்டிய ரூபா 168,645.10 தொடர்பில் 5.3(ஈ) இன் கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது. ரூபா 120,000 ஆன PB9379 எனும் இலக்க கெப் வண்டி விபத்துக்கு ஆளானமை தொடர்பான திரு. கே.ஜி.எம். ஜகத்திடம் அறவிடப்பட வேண்டியுள்ளது. இதில் ரூபா 20,000 2016 மே மாதம் 12ஆந் திகதி RCK244 எனும் பற்றுச்சீட்டு இலக்கத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அறவிட்டுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எழுத்து மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

3. நிதி மீளாய்வு

3.1. நிதி பெறுபேறு

3.2. நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள்

(அ) இணங்குகின்றேன்

2016ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஆ) இணங்குகின்றேன்

2016ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றுகை

(அ) சிறிய அளவிலான கருத்திட்டங்கள்

மீளாய்வு ஆண்டுக்கு நிலையத்தினால் 23 மாவட்டங்களுக்கான 83 கருத்திட்டங்களுக்கு என ரூபா மில்லியன் 614,872,537.74 ஆன மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா மில்லியன் 505,390,624.09 ஆன மதிப்பீட்டு தொகை 2015ஆம் ஆண்டுக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்டது.

(i) இந்தக் கருத்திட்டங்களில் 44 கருத்திட்டங்களுக்கான வேலைகள் 2015 டிசெம்பர் 31ஆந் திகதி வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மேற்படி கருத்திட்டங்கள் 2015ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டமை, கேள்வி கையளிப்பதில் எழுந்த சிக்கலான நிலைமை, கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பிரதேசங்களில் நிலவிய சமூக சிக்கல்கள் மற்றும் சீரற்ற காலநிலை இதற்கான காரணங்களாக மாவட்ட உதவிப்பணிப்பாளர்களுடன் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் தெரியவந்துள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ii) குறித்த கருத்திட்டங்களில் குருநாகல் மற்றம் பொலன்னறுவை கருத்திட்டங்கள் அந்த மாவட்டங்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பு செய்வது சம்பந்தமாக நடாத்தப்பட்ட கூட்டங்களில் நடாத்தப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய அமுல்படுத்தப்பட்டிருப்பதுடன் இந்த கருத்திட்டங்களில் கேகாலை மாவட்டத்தின் மூன்று கருத்திட்டங்கள் தவிர எஞ்சிய கருத்திட்டங்கள் 2015 டிசெம்பர் 31ஆந் திகதிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இடைக்கால முகாமைத்துவக் குழுவுக்கு அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தின் கருத்திட்டத்திற்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் மாவட்ட செயலாளருக்கு முழுத்தொகையையும் வழங்குமாறு மாவட்ட செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அமைச்சு செயலாளரிடமும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இறுதிக்காலாண்டு வரை இணக்கப்பாடொன்றை எட்ட முடியாமையினால் குறித்த முற்பணத் தொகையை நிலையத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(iii) 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற வெள்ள நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த காலப்பகுதிக்குள் மேற்படி கருத்திட்டங்களை ஆரம்பிக்க முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(iv) இக்கருத்திட்டங்கள் அனைத்துக்கும் எழுத்துமூலமான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட மட்டங்களில் இடம்பெறுவதுடன், ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பிலும் உடன்படிக்கையொன்று உள்ளது என்பதை அறியத்தருவதுடன், குறித்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கோப்புகளில் இடப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

(v) இக்கருத்திட்டத்திற்கு ஏற்பாடுகளை வெளியிடுவதானது உரிய பணிகளுக்கு அமைய விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(vi) பொலன்னறுவை மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள நிலைமை பற்றிய மீளாய்வு சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய வெள்ள அனர்த்தத்தினால் இடம்பெற்ற பாதிப்புக்களை புனரமைத்துக் கொடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டதற்கு அமைய ஆண்டின் இறுதியில் செயற்றிட்டத்தை திருத்தியமைத்து இந்தக் கருத்திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்படி மாவட்டத்தின் கருத்திட்டங்களுக்கு உடன்படிக்கைகளை செய்துகொள்வதானது தாமதமடைந்துள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(vii) வழங்கல் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு மொத்த நிதி தொகையும் சில சந்தர்ப்பங்களில் மாவட்ட செயலாளர்கள் கோருவதனால் வழங்கல் வழிகாட்டல்களுக்கு அமைய இது ஒரு தேவைப்பாடாக உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கருத்திட்டங்களை அமுல்படுத்தும் தேவையின் அடிப்படையில் அவ்வாறான விசேட சந்தர்ப்பங்களில் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் பின்னர் இடம்பெற்ற மாவட்ட செயலாளர்களின் கூட்டங்களில் இது சம்பந்தமாக கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

(viii) செயற்றிட்டத்தை தயார்செய்கின்ற சந்தர்ப்பத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அம்பாந்தோட்டை மாவட்டம் சம்பந்தமான கருத்திட்டங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கு அமைய செயற்றிட்டத்தில் உள்ளடக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் சந்தர்ப்பத்தில் இந்த கருத்திட்டங்களுக்கு உரிய விரிவான மதிப்பீடு மற்றும் கருத்திட்ட அறிக்கைகளை பெற்றுக்கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி தகவல் போதியளவில் பெற்றுக்கொடுக்கப்படாமை காரணமாக அந்த கருத்திட்டங்களை அமுல்படுத்த முடியவில்லை என்றும் அதனால் செயற்றிட்டத்தை திருத்தியமைக்க வேண்டி ஏற்பட்டது என்றும் தயவுடன் அறியத்தர விரும்புகின்றேன்.

(ஆ) பாரியளவிலான கருத்திட்டங்கள்

(i) 2014ஆம் அண்டு களுத்துறை, யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளை ஆகிய கருத்திட்டங்களை பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளை கருத்திட்டங்கள் தொடர்பில் அந்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த பணிகள் உரிய ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட போதிலும் சகல கொடுப்பனவுகளையும் நிறைவுசெய்யத் தேவையான ஏற்பாடுகள் 2014ஆம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைக்கவில்லை. இதன்காரணமாக இந்த கருத்திட்டங்களுக்குரிய சகல கொடுப்பனவுகளும் 2015ஆம் ஆண்டில் செலுத்தி முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் களுத்துறை, பானந்துறை வெள்ளத்தைக் குறைக்கும் கருத்திட்டங்களை திட்டமிட்டுள்ளவாறு உரிய ஆண்டில் நிறைவேற்ற முடியாது போனதுடன் இந்தக் கருத்திட்டங்களுக்கு சட்டவிரோத நிர்மாணிப்புகளை அகற்றுவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தமை பாரிய சமூக சிக்கலொன்றாக எழுந்தது. அவ்வாறு சிக்கல்கள் எழுந்ததனால் திறைசேரியின் கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவுடன் கலந்துரையாடல்களை நடாத்தி உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த கருத்திட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற பிரதேசம் ஒன்றான இந்தப் பிரதேசத்தின் நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்வதில் பாரிய சிக்கல்கள் எழுந்திருப்பதுடன் அது தொடர்பாக இதற்கு முன்னர் கணக்காய்வு வினாக்களில் விரிவான விடைகள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தக் கருத்திட்டத்தை 2015ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய முடியாது போனதுடன் அமைச்சுக்கு அறிவித்து அதற்கமைய 2016 ஜூன் அளவில் சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டு கருத்திட்டத்தின் இறுதி அறிக்கையை பெற்றுத்தருமாறு அறிவிக்கப்பட்டது. இதற்கமைய உரிய கருத்திட்டம் பற்றிய விரிவான அறிக்கையை கணக்காய்வுக்கு வழங்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

(ii) தம்புள்ளை கருத்திட்டத்திற்கு 2012ஆம் அண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா மில்லியன் 90 ஆகும். அதற்கமைய கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் முதற்கட்டத்திற்கான கேள்வியை கையளிப்பதில் நிலவிய சிக்கலான தன்மை காரணமாக முதற்கட்டம் சம்பந்தமான எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் உயர் அதிகாரிகளிடமிருந்து பெற்ற அறிவுரைகள் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுக்கு அமைய இதற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை வேறு கருத்திட்டம் ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இங்கு கால்வாய் ஒன்றை வெட்டி

அதற்கான பக்கச்சுவர்களை நிர்மாணிப்பது நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஜனாதிபதி விசாரணை பிரிவினால் விசாரணை பூர்த்தி செய்யப்படும் வரை கட்டம் 02 மற்றம் 03ஐ நிறைவுசெய்யுமாறு வழங்கப்பட்ட அறிவுரைக்கு அமைய மேற்படி கட்டங்களுக்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டளவில் 2013ஆம் ஆண்டின் முதற்கட்டத்தின் கீழ் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததன் காரணமாக கால்வாயின் இருபுறமும் சேதமடைந்து தனியாரின் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடியதாக இருந்ததனால் கட்டம் 1 தொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் இந்த கருத்திட்டத்தை நிறைவுசெய்ய இணக்கப்பாட்டுக்கு வந்ததுடன் அதற்கமைய உரிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய வழங்கப்பட்ட ஏற்பாடுகள் பின்வருமாறாகும்.

ஆண்டு	வழங்கப்பட்ட ஏற்பாடு (ரூபா)
2013	20,200,000.00
2014	20,000,000.00
2015	42,000,000.00

(iii) இந்தக் கருத்திட்டம் தாமதமடைவது சம்பந்தமான பின்னணி (அ)(i)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக அமைச்சு, திறைசேரியின் கருத்திட்ட கண்காணிப்பு திணைக்களத்துக்கு அறிவித்து 20126 ஜூன் அளவில் நிறைவு செய்வதற்கு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(இ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் நிதி வழங்குவது டிசெம்கர் மாதம் முதல் வாரம் வரை தாமதமடைவதானது பிரதேச அனர்த்த முன்னாயத்தங்கள் மற்றும் அவசர நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டங்களை இற்றைப்படுத்தல் மற்றும் அச்சிடுவதற்கான நிகழ்ச்சிகள் 4ஐ நடாத்தும் நடவடிக்கைகளை 2015 டிசெம்பர் 31ஆந் திகதி வரை மேற்கொள்ள முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஈ) முன்னறிவித்தல் செய்யும் பிரிவு

சம்பவ ஏற்பாட்டு கட்டமைப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2016ஆம் ஆண்டில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு அது சம்பந்தமான பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களை தேடிப்பெற்றுக்கொள்ள முடியாமை, கடந்த ஆண்டு எதிர்நோக்கிய பல்வேறு அனர்த்த நிலைமைகளுடன் நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமை, நிதி ஏற்பாடுகள் கிடைப்பது தாமதமடைந்தமை போன்ற காரணங்களினால் திட்டமிடப்பட்டவாறு மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(உ) அவசர நடவடிக்கை பிரிவினால் நிறைவேற்ற வேண்டிய பணிகள் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படாமைக்கான காரணம் அவசர நடவடிக்கை நிலையத்தினால் நிறைவேற்றப்படுகின்ற உத்தியோகபூர்வ அந்தஸ்து வாய்ந்த தன்மையின் அடிப்படையிலாகும். அதாவது 24X7 மணிநெரமும் அவசர நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நடவடிக்கைகள் இந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் எந்த சந்தர்ப்பத்தில், எந்த நேரத்தில், எந்த தினத்தில் அனர்த்தங்கள் இடம்பெறும் என்பதை முன்னதாக பெற்றுக்கொடுக்க முடியாமையினால் செயற்றிட்டத்தை வழங்க முடியவில்லை.

எனினும் யாதாயினும் ஒரு திடீர் அனர்த்தம் எழும் பட்சத்தில் பின்வரும் நடவடிக்கைகள் அவசர நடவடிக்கை நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. முன்னதாக எச்சரித்தல் மற்றும் அனர்த்தத்திற்கு உட்படக்கூடிய மேற்படி அனர்த்தங்களுக்கு தாக்கம் செலுத்துகின்ற பிரதேசங்களில் உள்ள மக்களை அகற்றுதல்

2. நடவடிக்கை ஒருங்கிணைப்பு (முப்படை மற்றம் பொலிசாரை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்)

3. தேவையான ஏனைய தரப்பு நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு உதா: ரெலிகொம் நிறுவனம், மின்சார சபை, நீர் வழங்கல் சபை, மகாவலி அதிகார சபை போன்றன.

4. அனர்த்தத்திற்கு ஆளானவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வது சம்பந்தமான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

5. அனர்த்தத்திற்னுகு ஆளானவர்களை மீள வழமைக்கு கொண்டுவரும் வரை அதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

6. சகல அனர்த்த தகவல்களையும் அறிக்கையிடல்

(அ) முன்னாயத்த திட்டங்களை தயார்செய்வது பற்றிய நடவடிக்கைகள்

4.2. முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2009ஆம் ஆண்டில் பாதுக்க ரெலிகொம் காணிப்பிரதேசத்தில் செய்மதி தொழில்நுட்ப நிலையம் தாபிக்கப்பட்டதுடன் அதன் மூலம் அனர்த்த முகாமைத்துவத்துக்கு செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது பிரதான நோக்கமாக இருந்தது. ICET கருத்திட்டத்தினால் இந்த செய்மதி தொடர்பாடல் முறையியல் முன் ஆராய்கை இன்றி நிறுவனத்தின் தேவைகளுக்கு உரியவாறு பூர்த்திசெய்ய முடியாத தொழில்நுட்பத்தைக் கொண்டதாக தாபிக்கப்பட்டதுடன் நாளுக்கு நாள் வளர்ச்சியடைகின்ற தொழில்நுட்பத்துடன் இந்த தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் முறையியல்கள் காலம் கடந்ததாக காணப்படுவதனால் தற்பொழுது செயலிழந்த நிலையில் உள்ளது. இந்த செய்மதி தொழில்நுட்ப உபகரணங்கள் அமைந்துள்ள வளவு ரெலிகொம் நிறுவனத்தின் நிலப்பிரதேசமாக உள்ளதனால் ரெலிகொம் நிறுவனத்தின் வேறு நடவடிக்கைகளுக்காக இந்த காணிப்பிரதேசத்தை பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. எனவே இந்த செய்மதி தொழில்நுட்ப உபகரண கட்டமைப்பை அங்கிருந்து அகற்ற வேண்டி ஏற்பட்டதனால் அந்த செய்மதி உபகரண கட்டமைப்பை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) இணங்குவதில்லை

அவசர நடவடிக்கை நிலையத்தின் தேவையின் அடிப்படையில் இந்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. பொருட்களை கோரியுள்ள பிரிவுகளுக்கு பொருட்களை எடுத்துச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(இ) இணங்குவதில்லை

தேவைகளின் அடிப்படையில் பொருட்களின் இருப்புகள் பற்றிய பதிவேடுகள் சில பேணிவரப்படுகின்ற போதிலும் அவற்றை சமன் செய்து குறித்துக் கொள்வதுடன் கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பு மூலமும் பொருட்களின் இருப்பு பதிவேடு பேணிவரப்படுகின்றது. தேவையானவாறு மேற்படி ஆவணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதற்கான வசதி உள்ளது. சரியான இருப்பு பதிவேடு ஒன்று கணக்கீட்டு மென்பொருளின் மூலம் பேணிவரப்படுகின்றது. கணக்காய்வுக்கு இதனைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஈ) இந்த கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் குறித்த கருத்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு ஏற்புடைய

கருத்திட்டங்களின் முன்னேற்றமும் ஒவ்வொரு மாதமும் அமைச்சு மற்றும் இடைக்கால முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

	மாவட்டம்	அமைச்சின் செயற்றிட்டத்திற்கு அமைய	நிலையத்தின் செயற்றிட்டத்திற்கு அமைய	கருத்திட்டம் மாற்றமடைவதற்கான காரணம்
1.	ஹம்பாந்தோட்டை	40	09	ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் கருத்திட்டத்திற்கு விரிவான மதிப்பீடு மற்றும் அறிக்கை கிடைக்காமையினால் மேற்படி கருத்திட்டத்தை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கமைய மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்கும் போது அமைச்சுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.
2.	கிளிநொச்சி	06	01	06 கருத்திட்டங்கள் கிணறுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டங்களாக உள்ளதனால் மேற்படி 06 கருத்திட்டங்களும் ஒரே கருத்திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டமை
3.	குருநாகல்	02	13	ஆண்டின் இறுதிக்காலாண்டில் குருநாகல், பொலன்னறுவை மாவட்டங்களில் நடைபெற்ற அனர்த்த நிலைமைகளினால் ஏற்பட்ட பாதிப்பை கவனத்தில் கொண்டு மேற்படி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பதற்கான கருத்திட்டங்களை உள்ளடக்க அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ளது.
4.	மாத்தளை	02	04	கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது எழுந்த பல்வேறு சமூக, நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் சில கருத்திட்டங்களை துரிதமாக நிறைவுசெய்ய வேண்டிய தேவையின் அடிப்படையில் வேறு ஏற்பாடுகள் மேற்படி கருத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதனால் மாவட்ட செயலாளர்களின்

				கோரிக்கைக்கு அமைய மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாதாந்த முன்னேற்றத்தை சமர்ப்பிக்கும்போது அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
5.	அம்பாறை	01	02	கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது எழுந்த பல்வேறு சமூக, நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் சில கருத்திட்டங்களை துரிதமாக நிறைவுசெய்ய வேண்டிய தேவையின் அடிப்படையில் வேறு ஏற்பாடுகள் மேற்படி கருத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதனால் மாவட்ட செயலாளர்களின் கோரிக்கைக்கு அமைய மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
6.	காலி	04	03	ஒரு கருத்திட்டம் பலப்பிட்டி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டள்ளதால் அந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை
7.	கேகாலை	04	02	கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது எழுந்த பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் சில கருத்திட்டங்களை துரிதமாக நிறைவுசெய்ய வேண்டிய தேவையின் அடிப்படையில் வேறு ஏற்பாடுகள் மேற்படி கருத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதனால் மாவட்ட செயலாளர்களின் கோரிக்கைக்கு அமைய மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
8.	நுவரெலியா	04	03	சட்டவிரோத நிர்மாணிப்புகள் காரணமாக வெற்றிகரமான கருத்திட்டமாக இருக்காது என்பதனால் இரத்துச் செய்யப்பட்டது.
9.	பொலன்னறுவை	01	16	ஆண்டின் இறுதிக்காலாண்டில் குருநாகல், பொலன்னறுவை மாவட்டங்களில் நடைபெற்ற அனர்த்த நிலைமைகளினால்

				ஏற்பட்ட பாதிப்பை கவனத்தில் கொண்டு மேற்படி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பதற்கான கருத்திட்டங்களை உள்ளடக்க அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னேற்றத்தை சமர்ப்பிக்கும்போது அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது
10.	இரத்தினபுரி	07	04	1. தனியார் காணி பிணக்கு காரணமாக வெளிக்கள விஜயத்தின் பின்னர் இரத்துச் செய்யப்பட்டது. 2. காணி உரிமையாளர்களில் இருந்து எழுந்த எதிர்ப்பு காரணமாக இரத்துச் செய்யப்பட்டது. 3. அனர்த்த நிலைமை காணப்படுவதில்லை என்பது வெளிக்கள விஜயத்தில் உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக.
11.	கம்பஹ	-	01	கம்பஹ மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமை மற்றும் அதற்கு காரணமாக அமைந்த கால்வாய்களை மறுசீரமைக்க வேண்டுமென்று அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டிருந்த கால்வாய்களை சுத்தம் செய்யும் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இதுபற்றி அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னேற்றத்தை சமர்ப்பிக்கும் போது அறிவிக்கப்பட்டுள்ளது.

4.3. பதவியணி நிர்வாகம்

(அ) பதவியணி நிர்வாகம்

2015.12.31ஆந் திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களில் பின்வரும் வெற்றிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

	பதவிகளின் எண்ணிக்கை
நிதி அலுவலர்	01
அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	02
சாரதி *	04
அலுவலக சிற்றூழியர்	03

* நிலையத்திற்கு புதிதாக 04 வாகனங்கள் தேசிய வரவு செலவுத்திணைக்களத்திடம் கிடைக்க இருந்ததனால் அதற்கான புதிய 04 பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. எனினும் உரிய வாகனங்கள் கிடைக்காமை காரணமாக 02 பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இணைப்புச் செய்ய இருக்க வேண்டிய 02 வாகனங்களும் இருக்காமை காரணமாக 02 வெற்றிடங்களும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- **2015.12.31ஆந் திகதியில் காணப்பட்ட ஏனைய வெற்றிடங்கள் தொடர்பான விடயங்களை சமர்ப்பித்தல்**

- உதவிப்பணிப்பாளர் பதவிகள் 02

  உதவிப் பணிப்பாளர் (குறைத்தல்) பதவிக்குரிய அடிப்படைத் தகைமைகளில் காணப்படுகின்ற சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்தப் பதவி நிரப்பப்படும்.

- உதவிப்பணிப்பாளர் (ஊடகம்)

  இந்தப் பதவிக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற ஊடகவியல் சம்பந்தமான கடமைகளுக்கு மேலதிகமாக சேவைசார் தேவையின் அடிப்படையில் கூடுதல் பொறுப்புக்களை கையளிக்கக்கூடிய வகையில் மாற்றம் ஒன்றை செய்வது அவசியமாகும் என்பதுடன்

அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் இந்த வெற்றிடத்தை நிரப்ப உத்தேசிக்கப்படுகின்றது.

- உதவிப்பணிப்பாளர் (மாவட்டம்) பதவிகள் 06

மாவட்ட உதவிப்பணிப்பாளர் பதவிகள் 06இற்கு அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முப்படை அதிகாரி ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இயங்கிவருவதனால் இந்த வெற்றிடத்தை பூர்த்திசெய்ய முடியவில்லை.

பணிப்பாளர் (நடவடிக்கை) பதவிக்கு இராணுவத்தின் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை இணைப்புச் செய்து கொள்வதற்கு தேசிய சபையினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்படி அலுவலர் ஒருவர் தற்காலிக அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதனால் குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாது.

- பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் நிதி)

இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு 08 சந்தர்ப்பங்களில் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் விண்ணப்பங்கள் சோரப்பட்ட போதிலும் தகுதிவாய்ந்த ஒரு அலுவலரேனும் விண்ணப்பிக்காமையால் அதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்த முடியவில்லை. இந்த நிலைமை நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவிடம் அறிக்கையிடப்பட்டதை அடுத்து மேற்படி குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய குறித்த பதவி பணிப்பாளர் (மனிதவளம், நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) எனும் இரண்டு பதவிகளை ஏற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகள் தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் மீண்டும் விண்ணப்பம் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பிரதிப்பணிப்பாளர் பதவிகள் 09

நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் பதவிகள் 09 காணப்படுவதுடன் அவற்றை உள்ளக பதவி உயர்வுகள் மூலம் நியமித்துக் கொள்ளப்படவுள்ள பதவிகளாகும். இதற்கு தகைமை பெறுவதற்கு உதவிப்பணிப்பாளர் மற்றும் அதற்கு சமாந்தரமான பதவி ஒன்றில் 10 வருட திருப்திகரமான சேவைக்காலம் அவசியமாகும் என்பதுடன் தற்போதைய அலுவலர்கள் அதற்கு தகைமை பெறுவது 2021ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 30ஆந் திகதியின் பின்னராகும். அதற்கமைய காணப்படுகின்ற பதவி உயர்வு நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்படி திகதிவரை இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது.

இந்த நிலைமை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அதற்கான மாற்றுவழியாக ஒரு சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடிய வகையில் தற்போதைய அலுவலர்களின் முன்னைய சேவைக்காலத்தை அதாவது அரசாங்க அல்லது அரச நிறுவனமொன்றில் கணிஷ்ட முகாமைத்து மட்டத்திலான பதவியொன்றில் 10 வருட திருப்திகரமான சேவைக்காலம் மற்றும் நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் பதவியில் நிரந்தர சேவையில் 04 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த மாற்றுத்தீர்வைப் பின்பற்றுவதற்கான கடிதம் 2015.12.07ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ளதுடன் மேற்படி தீர்மானத்துக்கு அமைய செயற்பட்டு முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இந்த நிலையத்திற்கு அறிவித்துள்ளது.

அதற்கமைய இந்த விடயங்கள் நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டதையடுத்து பிரதிப்பணிப்பாளர் பதவிகளுக்கான உள்ளக பதவி உயர்த்தும் விண்ணப்பங்கள் 2016.03.30ஆந் திகதி கோரப்பட்டுள்ளதுடன் மேற்படி விண்ணப்பங்களை கையேற்பது 2016.04.25ஆந் திகதி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்கான உள்ளக பதவி உயர்த்தும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஆ) இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் பதவிகள் 02இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை அவர்கள் பூர்த்தி செய்யவில்லை என்பது இதுவரை உறுதிசெய்யப்படவில்லை என்பதுடன் இதுதொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் செயன்முறை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசாங்க கணக்காய்வாளர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு இந்த அலுவலர்கள் குறித்த பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களிடமிருந்து அவர்கள் பெற்றிருந்த தகைமைகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையம் கடிதங்களை அனுப்பியுள்ளதுடன் இதனையடுத்து மேற்படி திணைக்களம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவித்திருப்பது பதவிகளுக்கு ஏற்புடையதாகின்ற சேவை அனுபவம் பற்றி மேற்படி அலுவலர்கள் இதற்கு முன்னர் சேவையாற்றிய நிறுவனங்களிடமிருந்து எழுத்து மூலம் வினவி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறாகும். அக்கடிதத்தின் பிரதி இந்த நிலையத்தின் பணிப்பாளர் நாகயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்படி செயன்முறை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

(இ) இதன்கீழ் ''ஒழுங்கமைப்பின் பணிப்பாளர் பதவிகள்'' என்பது ''உதவிப் பணிப்பாளர்'' பதவிகள் என திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்க கணக்காய்வுப் பிரிவினால் எழுத்து மூலம் அறியத்தரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விளக்கங்கள் மேலே 4.3(அ)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

5. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

5.1. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சட்டத்தை தாபித்தல்

மேற்படி சட்டத்தை திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சட்டப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

5.2. தேசிய அவசர நடவடிக்கைத் திட்டம்

(அ) தேசிய அவசர நடவடிக்கை திட்டம் இடைக்கால முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணம், நிலையத்தினால் பிரதானமாக இந்த நடவடிக்கைத் திட்டம் ஆங்கில மொழியில் மாத்திரம் தயார்செய்யப்பட்டிருந்ததனாலாகும். அதன்பின்னர் மொழிபெயர்ப்புச் செய்வதற்காக மற்றொரு நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் இந்த திட்டம் தயார்செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த திட்டத்தில் உள்ள தொழில்நுட்ப பதப்பிரயோகங்கள் மற்றும் தொழில்நுட்ப சொற்கள் சரியானவாறு சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருக்காமை காரணமாக மேற்படி திட்டத்தை மீண்டும் வெவ்வேறு கண்காணிப்புச் செய்ய செயற்பட்டதன் காரணமாக நீண்டகாலம் எடுத்தது. எனவே, இடைக்கால முகாமைத்துவக் குழுவுக்கு பூர்த்தி செய்யப்பட்ட திட்டத்தை சமர்ப்பிக்க முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஆ) சம்பந்தப்பட்ட தரப்பினர்களான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் 48இன் செயற்பணி மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான செயற்றிட்டத்தில் சம்பந்தப்பட்ட தரப்பு நிறுவனங்கள் 7இனால் திருத்தங்கள் எமக்கு அனுப்பப்படாமைக்கான காரணம் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் காணப்பட்ட நிறுவனங்கள் தற்போது அவர்களின் பிரதான பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் இந்த திட்டங்கள் வடிவமைக்கப்பட்டபோது இருந்த அலுவலர்கள் தற்போது அங்கு இல்லாமையும் தற்போதுள்ள அலுவலர்களுக்கு இதுபற்றிய புரிந்துணர்வு குறைவாகவும் உள்ளமையும்

ஊக்கம் குறைவாக உள்ளமையும் காரணமாக அவர்கள் எமக்கு திருத்தம் செய்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. இதற்காக நாம் பல சந்தர்ப்பங்களில் அவர்களை சந்தித்து அறிவுறுத்தி உரிய திட்டங்களின் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் என்ற வகையில் திட்டத்தின் திருத்தங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியதுடன் தற்போது மேற்படி திருத்திய திட்டங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

5.3. வாகனக் கட்டுப்பாடு

(அ) இணங்குகின்றேன்

வாகனங்களை பௌதீக அடிப்படையில் பரிசீலிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2016 ஜூலை மாதம் 15ஆந் திகதிக்கு முன்னர் மேற்படி நடவடிக்கைகளை நிறைவுசெய்ய ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஆ) கணக்காய்வின் ஆலோசனைக்கு அமைய உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்

(இ) இணங்குகின்றேன்

மேற்படி வாகனங்களை பொறுப்பேற்றுக் கொள்வதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு உரிய படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட போதிலும் அதற்கு அப்போதைய அமைச்சு செயலாளரின் இணக்கம் கிடைத்திருக்கவில்லை.

எவ்வாறாயினும் இந்த கணக்காய்வு வினாவை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் ஒரு முறை இதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் சமர்ப்பிக்க குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஈ) அப்போதைய மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளராக சேவையாற்றிய இராணுவப்படை அலுவலரிடமிருந்து குறித்த தொகையை இந்த நிலையத்திற்கு அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொளட்ளுமாறு கோரி மேற்படி அலுவலருக்கும் பிரதி சகிதம் DMC/02/05/68ஆம் இலக்க 2015.07.22ஆந் திகதிய கடிதம் மூலம் இராணுவ தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மற்றொரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்ப குறித்துக்கொள்ளப்பட்டது.

5.4. பயிற்சித்திட்டம்

2012ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்து அமைச்சு செயலாளரின் ஆலோசனைக்கு அமைய அனர்த்த முகாமைத்துவ நிலைய அலுவலர்களுக்கான பயிற்சித் தேவைகளின் மதிப்பீடு மற்றும் பயிற்சித் திட்டம் ஒன்று 3 வருடங்களுக்கு என தயார்செய்யப்பட்டது. எனினும் இதற்கான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

2016ஆம் ஆண்டில் மீண்டுமொரு பயிற்சித்திட்டம் 2017 – 2019 வரையான 03 வருடகாலப்பகுதிக்கு தயார்செய்யப்பட்டு 2016 மோ மாதம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

5.5. அறிவுறுத்தும் மொடியுள்களை தயார்செய்தல்

மொடியுள்களை தயார்செய்வதற்காக 2015ஆம் ஆண்டு முதல் நிதி ஏற்பாடுகள் கோரப்பட்ட போதிலும் நிதி ஏற்பாடுகள் கிடைக்கவில்லை. அதன்பின்னர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் 2016ஆம் ஆண்டில் அறிவுறுத்தல் மொடியுள்கள் தயார்செய்யப்பட்டு மாவட்ட உதவிப்பணிப்பாளர்கள் 25 பேருக்கு அவர்களின் கருத்துக்களையும் பிரேரணைகளையும் நடைமுறையில் அமுல்படுத்தும்போது எழுகின்ற சிக்கல்கள் மற்றும் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி கருத்துக்கள் வினவப்பட்டுள்ளன. இந்த கருத்துக்களும் பிரேரணைகளும் கிடைத்த பின்னர் 2016ஆம் ஆண்டு நிறைவடைய முன்னர் இந்த நடவடிக்கை பூர்த்திசெய்யப்படும்.

5.6. உள்ளக கணக்காய்வு

இணங்குகின்றேன்.

நிலையத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வெற்றிகரமாக வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயார்செய்யப்பட்டு அது நிலையத்தின் நிர்வாக சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி திட்டத்தின் அடிப்படையில் தயார்செய்யப்பட்ட மாதாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை பூர்த்திசெய்வதற்கு மற்றும் அந்தப் பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதில் காணப்படுகின்ற மனிதவள பற்றாக்குறை காரணமாக உள்ளக கணக்காய்வு சம்பந்தமான பல சிக்கல்கள் எழுந்துள்ளன. 25 மாவட்டங்களில் காணப்படுகின்ற 25 அலுவலகங்கள் மற்றும் கொழும்பில் உள்ள பிரதான தலைமையகத்தில் காணப்படுகின்ற பிரிவுகளில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அலவலர்கள் 2 பேர் மாத்திரம்

உள்ளார்கள் என்பதுடன் இதற்கு ஆகக்குறைந்தது மேலும் 2 பேரின் சேவை அவசியமாகின்றது. எதிர்காலத்தில் நிலையத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள புதிய ஆட்சேர்ப்புகளின் மூலம் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மனிதவளத்தை மேம்படுத்துவதன் ஊடாக கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த உள்ளக கணக்காய்வு வினாவுக்கு பதிலைப் பெற்றுக்கொள்வதற்காக உலரிய பிரிவு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5.7. வழங்கல் திட்டம்

(அ) இணங்க முடியாது

நிலையத்தினால் தயார்செய்யப்பட்ட வழங்கல் திட்டம் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னர் செயலாளரின் அங்கிகாரம் பெற்றதையடுத்து பொது திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றது.

(ஆ) இணங்குகின்றேன்

2015ஆம் அண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழங்கல் திட்டத்துக்கு அமைய 10 விடயங்களை கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு நடவடிக்கைகள் 2015.07.30ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வழங்கல் செயன்முறையில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மற்றும் 2015ஆம் ஆண்டில் நிர்வாக கட்டமைப்பில் அடிக்கடி இடம்பெற்ற மாற்றங்கள் காரணமாகவும் திட்டமிடப்பட்ட திகதியில் நிறைவு செய்துகொள்ள முடியவில்லை என்றும் எதிர்காலத்தில் இந்த சிக்கல்களை குறைத்துக் கொண்டு திட்டமிடப்பட்ட திகதிக்குள் கொள்வனவுகள் அனைத்தையும் நிறைவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் டிஎன்றும் அறியத்தருகின்றேன்.

வழங்கல் செயன்முறையின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கான செலவினமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா 75,000,000.00 ஆகும் என்பதுடன் இதில் ரூபா 164,521.00 ஆன தொகை அவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். இதுபற்றிய விபரங்கள் பின்வருமாறாகும்.

திகதி	உறுதிச்சீட்டு	விபரம்	பெறுமதி ரூபா	மொத்தம் ரூபா
2015.06.10	231	ஏ.ஆர்.டி.வை. சுபாசிரி		
		கேள்விப்பத்திரங்களை அச்சிடுவதற்கான முற்பணம்		

		(ஏசியன் டென்கோ சொலியுசன்ஸ்)		
2015.06.19	341	ஏ.ஆர்.டி.வை. சுபாசிரி		
		கேள்விப் பத்திரங்களை அச்சிடும் கட்டணத்தின் மீதி		
2015.07.21		வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனி	38500	58500
	346	பத்திரிகை விளம்பரம் - டெய்லி நிவ்ஸ்	**36,075**	
	347	பத்திரிகை விளம்பரம் - தினகரன்		**22,477.50**
	345	பத்திரிகை விளம்பரம் - தினமின	**31,468.50**	**90,021**
2015.07.22	**344**	நீல் பெர்னான்டோ அன்ட் கம்பனி போர்ட் ரேலர் போக்குவரத்துக் கட்டணம் கொழும்பிலிருந்து மாத்தறை வரை		**16,000**
		மொத்தம்		**164,521**

(இ) இணங்குகின்றேன்

வழங்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை விட அதிகமான எண்ணிக்கையில் மீட்பு மற்றும் கண்டுபிடிக்கும் பைகள் 08 பேருக்கான டென்ட் (கூடாரம்) போன்றன கொள்வனவு செய்வதற்கு பத்திரிகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் ஏற்றுக்கொள்வதுடன் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் தேவைக்கு அமைய அச்சந்தர்ப்பத்தில் அந்த விடயத்திற்கான சந்தை அலகின் விலையை கவனத்தில் கொண்டு மீள் மதிப்பீடுகளை தயார்செய்யும்போது நிதி எஞ்சியிருந்ததன் காரணமாக மற்றும் தேவைகளுக்கு அமைய செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு திட்டமிடப்பட்ட தொகைகளைவிட அதிகம் கொள்வனவை மேற்கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஈ) வழங்கல் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மற்றும் வழங்கல் வழிகாட்டல்களுக்கு அமைய அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழங்கல் திட்டத்தை திருத்தியமைத்திருக்க வேண்டுமென்பதை தயவுடன் ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில்

இவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

6. முறைமையும் கட்டுப்பாடும்

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(i),(ii),(iii),(iv) மற்றும் (v)இற்கு இணங்குகின்றேன்.

மேலே உள்ள விடயங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை எதிர்காலத்தில் சீராக்கிக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

அறிக்கையின் (ஆ), (இ), (ஈ), (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் எதிர்காலத்தில் மென்மேலும் இந்தப் பிரிவுகள் சம்பந்தமாக கவனமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

ஒப்பம் / மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர். மார்க் (ஓய்வுபெற்ற)
பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்